52.2
1102

உ
சிவமயம்.

திருமுதுகுன்றம்

ஸ்ரீ குமாரதேவர் சரிதம்.

இரண்டாவது வெளியீடு

திருத்துறையூர் ஆதீன மடாலயம்
விருத்தாசலம்.

A.No: 1102
வ: 332 ப

1505

உ

சிவமயம்

திருமுதுகுன்றம்

திருமடத்து ஆதீன முதல்வர்

ஸ்ரீ குமாரதேவர் சரிதம்

இதனோடு அவர்பேரில்

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ குமாரதேவர் பதிகமும்
நெஞ்சுவிடு தூதும்

சேர்க்கப்பட்டுள்ளது.

ஷை ஆதீனத்து 22-ம் பட்டம் வீரசிம்மாசனபீடம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச

பண்டார சந்நிதிகள் கட்டளைப்படி

திருப்பாதிரிப்புலியூர்

வித்துவான், தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியாரால்

இயற்றப்பட்டது.

விகாரி-ஞூ ஆனி-மீ

விலை அணா 8

உ

தென்னாட்டு
வீரசைவ ஞானபரம்பரை முதல்வர்கள்

1. திருத்துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள்
2. திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள்
3. திருமுதுகுன்றம் ஸ்ரீ குமாரதேவசுவாமிகள்
4. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

பதிப்பகம்
ஸ்ரீ இராமலிங்கா அச்சகம்,
வடலூர்.

உ

சிவமயம்.

பதிப்புரை

புண்ணிய மிகுதியால் மானிடராய்ப் பிறந்துள்ளோம். இவ்வரிய பிறவியை வீண்போக்கலாகாது. இதை நாம் அடைந்ததன் காரணத்தை அறிந்து, அடைய வேண்டிய பயனைக் கைக்கொள்ளவேண்டும். அங்ஙனம் அடைய வேண்டிய முடிந்தபயனை முத்திப்பேறு என எல்லாச்சமயங்களும் இசைக்கின்றன. இப்பிறவாப்பேற்றினை எய்துதற்கான வழிகள் பல. அவ்வழிகளையெல்லாம் தெள்ளத் தெளிந்து ஞானிகள் உபதேச முகமாகவும் நூல்களின் வாயிலாகவும் உணர்த்தி யுள்ளார்கள். தத்துவங்களையெல்லாம் பொய்யெனக்கண்டு தள்ளுதலும், உண்மை ஒரு பொருளேயாம் என்று கொள்ளுதலும் சுலபமாகக்கைவந்துவிடா. தத்துவக்களைவு, ஆன்ம தரிசனம், பரைதரிசனம், சிவ அநந்நியம் என்பவைகளை நாம் ஞானாசாரியர்களாலேயே அறியமுடியும். இவ்வாசாரியர்கள் தெய்வத் திருவருளுக் கிலக்கானவர்கள். எப்படி ஒரு பசுவினிடமுள்ள பாலை அதன்

அன்புக்குரிய கன்றினுல் கொள்ளுதல் உலக வழக்கோ அப்படியே தான் ஆசாரியர் முகமாகத் தெய்வத் திருவருளை அடைவதும். நாம் ஆசாரியபக்தி செலுத்தச் செலுத்தக் கடவுளருளைப் பெறுவது திண்ணம். ஆசாரியபத்தி செலுத்தும் திறம் பல வகைப்படும். அவற்றுள் ஒன்று அவரது சரிதத்தைச் சித்த சாந்தத்துடன் நாளும் ஓதுதலாகும். மற்றும் அவரைப்பற்றிய துதிப்பாசுரங்களை நாடோறும் தூயமனத்தொடு துதித்தலும் நன்ரும்.

இங்ஙனம் செய்வதால் எங்கும் வியாபகப்பட்டிருக்கும் குருதிருவருள், ஓதுவார் பக்குவ நிலைக்கேற்பத் திரண்டு ஞானமேனியோடு வெளிப்பட்டுத் தூய்மை செய்து ஆட்கொள்ளும். இங்ஙனம் செய்யாமல் வறிதே வாழ்தல் சமித்துக்கொய்யக் கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின் வாலைத்துணித்தலுக்கு நிகராகும்.

ஞான நன்னெறியினை மக்கட் குணர்த்தும் சம

யங்கள் பல. அவற்றுள்ளும் சிறந்ததாக ஆகமாதிகளாலும், உபநிடதங்களாலும் வீரசைவ சமயம் பாராட்டப்பட்டுள்ளது. தூல சூட்சும காரணங்களிலும், இம்மை மறுமைகளிலும், நீங்காத சிவ சம்மந்தம் உடைமையே இச்சமயத்தின் உயர்வுக்குக் காரணம் ஆகும். இத்தகைய சமயத்திலே பேராதரம் பூண்டு மக்கள் உய்யக்கருதிப்பல நன்னூல்களை விளங்கச் செய்தவர் வீர சைவ சமய ஞானபானுவாகிய நம் முதுகிரிக் குமாரதேவர் ஆவர். அவர்தம் சரிதத்தையும், அவர்மீதுள்ள துதியையும், இந்நூல் வெளியிடுகிறது. மற்றும், அவ்வாசாரியர் தமக்கருள் செய்த பெரியநாயகியாரைப் பரவியுள்ள தொரு பதிகமும் இதனுள் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் அமையப் பரம கருணைபூண்டு இந்நூலை வெளியிட்டுபகரிப்பவர் திருத்துறையூர்ப் பெரிய மடத்திலும், திருமுதுகுன்றம் குமாரதேவர் மடத்திலும் வீரசைவாதீன கர்த்தராகத் தற்போது எழுந்தருளியுள்ள 22-ம் பட்டம் வீரசிம்மாதனபீடம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் ஆவர். இவர்கள், சமயசம்மந்தமாகவும், பொதுவிாகவும் உள்ள பல அரிய நூல் களை யும் வெளியிட்டுதவ வேண்டும். என்கிற பரமோபகார சிந்தனை யுடையவர்கள். இவர்களுடைய இவ்வபிப்பிராயம் ஈடேறவும், நாமெல்லாம் அறிந்து வழிபட்டுய்யவும் சர்வ சக்திபரையாகிய ஸ்ரீ பெரியநாயகியம்மையார் திருவருள் பொழிவாராக!

இந்நூல் மிகச் சுருங்கிய போதிலே வெளியிடப்பட்டதாகலின் இதனிற் கண்ணுறும் மாறுபாடுகளையும் பிழைபாடுகளையும் அன்பர்கள் பொருட்படுத்தாமல் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன். பொன்னம் பலவாணர் திருவடி போற்றி!

இப்படிக்கு,

தே, ஆ. ஸ்ரீநிவாஸாசாரி,

நூலாசிரியன்,

திருப்பாதிரிப்புலியூர்.

ஸ்ரீ

ஸ்ரீ குமார குரவே நம:

திருமுதுகுன்றம்

ஸ்ரீ குமார தேவர் சரிதம்.

பாட்டு

கன்னட நாடு தவஞ்செய வந்தருள்
காவல வருகமிகக்
கடிநகர் பேரையி னரசடி வித்தக
கனியே வருகசிவம்
முன்னிய ளித்தருள் தண்புனல் கொண்டவ
முனிவா வருகமணி
முத்தந திப்பதி சித்தர சத்துறை
முதிர்தவ வருகபரை
தன்னரு ளாலளி பாலமு தம்பெறு
தலைவா வருகமுதுத்
தலமன் றதுதந் தசலச் சலமீள்
தயவோய் வருகதொழு
கன்மந் தொலைசெய் தாரூ ரிரதங்
கடிவோய் வருகபெருங்
காரூர் போரூர்க் கவிதில கம்பணி
கடவுள் வருகுறவே.

ஸ்ரீ சைல மாண்பு.

பொன்மலை முதலாகப் பன் மலைகளும் வளஞ் செய்யும் நம் பரத கண்டத்திலே எல்லா மலைகளினும் ஏற்ற முடையதாக விளங்குவது ஸ்ரீ சைலம் என்னும் பருவதமாகும். இதற்கு மல்லிகார்ச்சுனம், திருப்பருப்பதம் எனவும் வேறு பெயர்கள் வழங்கும். இது கர்நூல் ஜில்லாவில் நந்தியாலிலிருந்து வடகிழக்கே அறுபத்தாறு மைல் தொலைவில் உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதனைச் "செல்லலுற அரிய சிவன் சீபர்ப்பதமலை" எனப் புகழ்ந்துள்ளார். இது மூவர் பாடலும் உடையது. பத்தி நீத்தமாகிய நந்தி தேவரே பர்வத வடிவாகிப் பெருமானைச் சுமக்கும் பேறு வாய்ந்தது. இந்த மலையின் பெருமைக்கு ஏக்கமுற்றே ஒரு மலை கடலுள் வீழ்ந்தது. ஒன்று குழைந்து வளைந்தது. மற்றும், மலை என்று பொருள்படும் பருப்பதம் என்ற பொதுப் பெயரையே இது தனது சிறப்புப் பெயராகக்கொண்டது. மலை வளமெல்லாம் மலிதரப்பெற்றது. முன்னொரு மலையைத்

தன்ஞெரு கரத்தால் பிலத்தில் தள்ளிய மகத்துவம் மிக்க அகத்திய முனிவன் தம்மிரு கரங்குவித்துச் சென்னியால் வணங்கி யேத்தும் சிலம்பாகும் இது, இதனில் குஞ்சரம் முதலியன மகிழ்வொடும் சஞ்சரிக்கும். விஞ்சையர் யாழ் முதலிவத்ருல் இன்னேசை யெழுப்பி அஞ்செவி நிறைப்பர். தபோதனர் பலர் இதனில் தவச்சித்தி பெற வாழ்வர். ஆடாத மேனியும் அசையாத உள்ளமுங்கொண்டு முனிவர் பலர் இதனிலிருந்து யோகம் புரிவர். அல்லமாப்பிரபுவின் அருளுக்கிலக்காகிய கோரக்கர் வாழ்ந்து தவச்சித்தி அடையப்பெற்றது இம்மலையிலாகும். கண்டவர் தமக்கெலாம் கயிலைகாட்டலால் வண்டவர் பலர் இதனில் வசிப்பர். ஸ்ரீ பச்சைக்கந்த தேசிகர் தவம் புரிந்து சிவாநுக்கிரகம் அடைந்தது இம்மலையிலே தான். ஞான சமயமாகிய வீர சைவசமயத்தார்களுடைய பஞ்சாசாரிய பீடங்களில் இம்மலை பர்வத சிம்மாசன பீடமாக விளங்கும் விழுப்பம் பெற்றுள்ளது. மற்றும் இம்மலையின் சிறப்புகள் அனந்தமாகும். இம்

மலையின் மேன்மையைச் "சொல்லுதலறியாராகிச் சுரர் முனிவரர்கள் தம்முள் வல்லவரென இருக்கும் அறிஞரும் மயங்கி நிற்பர்" என்று துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளே உரை செய்துள்ளார். சுருங்க உரைப்பின், நிலமாமகள் தன் கழுத்தில் நீங்கா தணிந்துள்ள செச்சையணி போல்வதாகும் இப்பருவதம் என்னலாம்.

இருவர் தவம் புரிதல்,

எல்லா வகையாலும் சிறப்புத்தோங்கும் இம் மலையினிடத்திலே தவச்சித்தி பெற விரும்பிய பற் பலர் இடையறாது யோகம் புரிந்து வந்தனர். அரிய மானிடப்பிறப்பை அடைந்தவர்கள் செய்ய வேண்டு வது அருந்தவமேயாகும். இதனாலேயே "தவஞ்செய் வார் தம் கருமஞ் செய்வார்" என்றனர் திருவள்ளுவ ரும். மனம், பொறிகளின் வழியே புறம் போகாது அகமுகப்பட்டு நிற்றற்காக இயமம் முதலியவற்றை மேற்கொண்டு உணவு குறைத்தல் முதலியவற்றால்

தும் உயிர்க்குவரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, புலால் மறுத்தல் முதலிய சீலங்களால் பிற உயிர்களையும் பாதுகாத்தலே உண்மையான தவமாகும். இத்தகைய தவமியற்றுவோர் எத்தகைய நலனை வேண்டினும் தட்டாமலடைவர். இத்திறப் பட்ட தவப்பேற்றினலேயே சுவேதன், மார்க்கண்ட டன் முதலானோர் நமனையும் வென்றனர் என்பர். சுடச்சுட மாசு நீங்கி விளங்கும் பொன்போலவே, தவம் செய்யச்செய்ய பொறிகள் குற்றமகலும்; உட லும் ஒளிமிகும். ஆன்ம விளக்கம் எய்தும். இவ்வண் ணம் தவத்துறை முற்றிய தபோதனர்க்கு "ஒன் னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்" ஆகிய சாபானுக்கிரக சக்தியும் விளையும். தவம் புரிவோர் எவரும் எவ்வகைப்பற்றும் அற்றவராய் வீடு பேறு ஒன்றையே கருதியவராய் ஒழுகவேண்டும். இம்மாதி ரியான தவம் புரிபவரே நிஷ்காமிய தவஞ் செய்பவ ராவர். உள்ளத்தில் கள்ளங்கொண்டு தவம் புரிபவர் கேடு அடைவர். இவ்வுண்மைகளை இச்சரிதம் நமக்கு

நன்கு தெரிவிப்பதைக்காணலாம்,

"தவமும் தவமுடையார்க்காகும்" என்றபடி இம் மலையின் ஒரு புறத்திலே ஒரு பெரியவர் செயற்கரிய தவத்தைச்செய்து வரலானார். இவர் இதற்கு முன்னர் ஐந்து பிறப்புகளிலே பையப்பையத் தவமாற்றியவர். இப்போது அடைந்துள்ள ஆறாவது பிறப்பிலும் அத்தவநெறியிலேயே நிலைத்து ஒழுகினர். இவர் மரவுரியை உடையாக அணிந்தவர். சடை முடியுடையவர். ஒளிமிக்க உடலினர். மான்தோற்போர்வையர். ஊன்கெடும். மார்பின் எலும்பெழுந்தியங்கும் யாக்கையினையுடையவர், மாதோபவாச முதலிய வற்றால் ஊன் ஒழித்தவர். பகைமை, செற்றம், காமம், கடுஞ்சினம் இவற்றை முதலறக்கடிந்தவர். தவத்தால் மெய்வருத்த மிருப்பினும் மனத்தால் சிறிதும் வருத்தம் அறியப்படாத இயல்பினர். எவரையும் வெறுக்காத நல்ல அறிவினை உடையவர். இத்தகைய பெரியோராகிய இவர் தவம் புரிந்து வரும்

சாரலிலே மற்றேருவரும் தவம் புரிந்து வந்தவனர். அவர் தவ நிலைக்காவனயாவும் கொண்டிருந்தா ரெனினும் உள்ளத்தில் மறைமுகமாக ஆசையுடைய வராயிருந்தனர். இங்ஙனமாக இருவரும்பல காலம் தவம் புரிந்துவரலாயினர்.

சிவபெருமானைக் காண்டலும் வரம் வேண்டலும்.

மேற்கூறிய விதமாகத் தவம் புரிந்த இருவரை யும் சிவபெருமான் ஆட்கொள்ளத் திருவுள்ளங் கொண்டனர் முதலில் நிஷ்காமிய தவஞ்செய்து கொண்டிருந்த நம் பெரியார் முன்பு வெளிப்பட்டுக் காட்சி தந்தனர் சிவபெருமான், இதனையுணர்ந்தவர் கண்ணுதற் பரம்பொருளைக் கண்களாரத் தரிசித்து விழிநீர் பெருக்கி நின்று விழுந்து பணிந்து எழுந்து உடலம் புளகிப்ப வாய்திறந்து, "எம்பெருமானே! பிறப் பிறப் பில்லாதவரே! பரஞ்சோதியே! அடியார் கள் மூழ்கும் அருட்கடலே! எங்கும் நிறைந்தவரே!

அறிவிலியாகிய அடியேன் கண் முன்னே தோன்றி யருளிய தேவரீருடைய கருணைத்திறத்தை என்னென் றியம்புவது! தேவரீருடைய திருவருள் நோக்கினல் அடியேன் கிருதார்த்தனுனேன்" என்று நாத்தழுதழுக்க வாழ்த்தி நின்றனர். உடனே சிவபெருமான், "நின் கருத்தென்ன? என்னை நாடித் தவம்புரிந்தது எதற்காக? என்று வினவியருளினர். இதைக்கேட்ட நம் பெரியவர், பெருமானை நோக்கி, "அடியேன் அகத்தே அகலா திருந்தருளும் ஆதி மூர்த்தி! தேவரீர் அடியேன் கருத்தை அறியாத வரோ! தேவர்கள் தேவே!" துன்பம் ஓர்காலும் சென்றிடா முத்திதானெய்திச் சாவதும் பிறப்பும் நீங் கும் ஓர் நெறியைச் சாற்றி யருளுக" எனப்பணி வோடு விண்ணப்பித்தனர். இதைக்கேட்ட சிவபெரு மான், "அன்பனே! உன் கருத்துக்கு மெச்சினேம். நீ அடுத்த பிறப்பினை அடைந்து சுத்த தேகியாய்ச் சாதுக்கள் வாழும் நல்ல நாட்டினைச் சிலகாலம் அரசு செலுத்திச் சற்குரு உபதேசம் பெற்று நமக்கு

மிகவும் உகந்த தலமாகிய விருத்தகிரியிலே ஆட்கொள்ளப்படுவாய்" என்றுகூறி மறைந்தருளினார்.

பின்னர் அப்பரம்பொருள் அங்குத் தவமியற்றிக் கொண்டிருந்த மற்றவர் முன்பு காட்சிதந்து நின்றார். அதுகண்ட அத்தவசியார் ஆசை யறப்பெருதவராதலால் கும்பகருணனைப்போல ஒன்றைக் கருதி மற்றொன்றை வரமாகக் கேட்டனர். இங்ஙனம் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று வேண்டியதைக் கேட்ட பரசிவம் வெகுண்டு "அடா! உனக்கு இன்னம் பற்று நீங்கவில்லை; ஜட ஆசையை நீ இன்னம் முனிந்தாயில்லை. அற்றது பற்றெனில் உற்றது வீடென்பதைத் தவசியாயிருந்தும் அறிய வில்லை. ஆதலால் ஜட விருப்பத்தை முனியும் பொருட்டு நீ ஜடாமுனியாவாய்!" என்றுகூறினர். இச்சாபத்தைக் கேட்ட மாத்திரத்திலே ஆசைத் தவசியார், நெஞ்சம் துணுக்குற்று நடுநடுங்கி அடியற்ற பனை போல் வீழ்ந்தெழுந்து, "பரம்பொருளே! ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கிரங்கித் தீது புரியாத தெய்

வமே! கருணைக்கடலே! ஏது செய்வேன்! ஊழ்வினை வலியால் ஒன்றைக்கருதி ஒன்றைக்கேட்டுவிட்டேன். அடியேனை ரக்ஷித்தருளுவது தேவரீரது பாரம். வேறு அடியேனுக்குத் துணையாவார் யாவர்? அந்தோ! அடியேன் அறியாமையைப் பொருட்படுத்தாமல் மன்னித்துச் சாபவிமோசனம் செய்தருளிவீராக;" என்று கல்லும் உருகக்கசிந்து வேண்டினர். இதைக்கேட்ட பரமகருணாமூர்த்தியாகிய விடையேறும் பெருமான், அவர்பால் இரக்கங்கொண்டு "குற்றம் உணரப்பெற்ற தவசியே! நீ பரதகண்டத்திலே எந்நாட்டிலும் முன்னாட்டிக்கூறும் தென்னாட்டிலே மணி முக்தா நதிக்கரையிலே விருத்தாசலம் என்றொரு பழம் பதியுள்ளது. அங்கு அந்நதிதீரத்திலே உள்ள அரச மரத்திலே சென்று தங்கியிருப்பாய். அவ்வாறிருப்பின் இம்மலையிலே உன்னோடு தவமாற்றிய எமது அன்பன் ஒருவன் கன்னட நாட்டு அரசனாகப் பிறந்து, சிறிது காலம் செங்கோல் செலுத்திச் சார்புணர்ந்து சார்புகெட ஒழுகித் துறவு

மேற்கொண்டு சற்குரு உபதேசம்பெற்று அவராணைப்படி மேற்சொல்லிய அரசமரத்து அடியில் வந்து வீற்றிருப்பான். நீ அவனை வணங்கிச் சாபவிமோசனம் பெறுக!" என்றுகூறி மறைந்தருளினர். அது முதல் அத்தவசியும் ஜடாமுனியாகி முற்கூறிய தலமடைந்து அரசமரத்திலே அமர்ந்திருந்து தனது சாப விமோசன காலத்தை எதிர்பார்த்திருந்தனன்.

அரசபதவியும் அதனை வெறுத்தலும்.

நிஷ்காமிய தவஞ்செய்து சிவதரிசனப்பேறு பெற்ற நம் அரும் பெருந்தபோதனர் சிவபெருமான் திருவருளினலும் பூர்வபுண்ணிய விசேடத்தாலும் கன்னட தேசத்தரசன் மகனக அவதரித்தனர். அரசர்க்குரிய வித்தை பலவும் உரியபோதிற் கற்ருர். ஞானநூல்கள் பலவற்றையும் ஓதியுணர்ந்தார். சற்குரு கடாக்ஷம் எப்போது நாம் வாய்க்கப் பெறுவோமோ என்று அந்தரங்கத்தில் எண்ணிவந்தார். தக்க பிராயத்தில் மணிமுடிதாங்கி மன்னவரானர். மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிரெனக்கருதிக் கண்ணை இமைகாப்பதுபோலக் குடிமக்களைப் பாதுகாத்து வந்தார். கொடை, அளி,

செங்கோல், குடியோம்பல் நான்கும் பூண்டு வேந்தர் கொளியாக விளங்கினுர். நல்ல பலஞான விஷயங் களைக்கேட்டு வந்தார். மூத்த அறிவுடையார் கேண்மை பூண்டொழுகினுா. காலம் இடம் முதலிய அறிந்து கருமங்களை நிகழ்த்தினுர். இவரது ஆட்சி விசேடத்தால் இவரது நாட்டில் அறம் வளர்ந்தது மாதவர் நோன்பும் மடவார் கற்பும் பல்கின மாரி வளம் பெருசிற்று. குடிமக்கள் எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்திச் செல்வந்தரின்ஞர் எனக் கூற வொண்ணுதபடி சிறந்தனர். தெய்வபக்தி சுடர் விட்டு ஒளிர்ந்தது. இவ்விதம் கண்ணிற்சொல்லிக் காதாற்காணும் இறைமையை மாட்சிபெற இம்மன் னர் நடத்தி வந்தனர். நாளுக்கு நாள் இம் மன்னர் பிரானுக்கு அரசுரிமையில் உவர்ப்பு ஏற்படலாயிற்று. நாட்டை ஆள்வதைவிட்டு வீட்டின்பவெள்ளத்தில் மூழ்குவதையே விரும்பினுர். ஆகமிகள் ஏத்தும் ஞானவாரணத்தையே ஊர்தற்கு எண்ணுஞர். மனமா உகைக்குமாறு கருதினுர், சாமமறை முர சொலிக்க அருட்கொடிபிடிக்க அவாவினுர். கஞ்சன்,

வேள் கடுங்கூற்றம் இவர்களை அஞ்சச்செய்ய விழைந்தார். இவற்றையெல்லாம் அமைச்சரிடம் அடிக்கடி சொல்லி அரசைத்துறக்க அற்றம் நோக்கியிருந்தார். அன்று தொட்டு இவர் இடையன் சென்னிக் கும்பமிசைநெஞ்சு வைத்த கொள்கைபோல் ஆட்சிபுரிந்து வரலானர்.

சற்குரு வாய்ப்பு.

இஃதிவ்வாருக, கும்பகோணத்திலே அவதரித்து, திருவாவடுதுறைக்குவந்து திருக்கைலாய பரம்பரை நமச்சிவாயமூர்த்திகளால் தீட்சை செய்யப்பெற்றுச் சிவப்பிரகாச சுவாமிகள் என்ற திருப்பெயருடையவராய் மேற்படி ஆதீனத்திற் சிறிது காலமிருந்து சிதம்பரம் நடராஜப்பெருமானுக்குரிய பூஜை முதலியவற்றை நில்லாமல் நிகழ்விக்கும் பொருட்டு வீரசைவ சுவாமிகளாகிப் பல தெய்வீகங்களை நடத்திக்காட்டித் திருவண்ணமலை மடத்திற் சிலகாலம் தங்கியிருந்து, பின்பு துறையூரரசரால்

மைக்கப்பட்ட திருமடத்தில் தங்கியருள் நேர்ந்த ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றும் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்னும் நான்கு நூல்களை ஜீவகாருண்யம்—ஈசுரபக்தி—பாச நீக்கம்—பரமஞானம் என்னும் சாதனக்கிரமமாக இயற்றியருளி, இல்லறம் துறந்து ஞான நிட்டையுடையவராய் அண்டினோரை யெல்லாம் அதிபக்கு விகளாக்கிக் கொண்டு திருப்பேரூரில் ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள் என்ற திருப்பெயருடையராய் ஒரு வீரசைவ சமயாசாரியர் வீற்றிருக்கலானார், இவ்வாசிரியருடைய பெருமை மணம் நாடோறும் நாற்றிசையும் கமழலுற்றது. இப்பெரியாருடைய பெருமைகளையெல்லாம் அடியார்களால் அடிக்கடி நம் கன்னட தேயத்து மன்னர் பெருமான் அறியலுற்றனர். நாட்கு நாள் அவ்வாசிரியரையடையும் ஆசை விஞ்சியது. அதனால் இவர் அரசபோகம் துறந்து வைராக்கிய நிலை எய்தினார். தமது முதன்மை மந்தி

ரியின் மூலமாக ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளுக்குத் தமது விருப்பத்தை வெளியிட்டனர். ஒரு நாள் மணி முடி துறந்து சடைமுடி தாங்கிப் பாதசாரியாய்த் திருப்பேரூரடைந்து ஞாஞசாரியார் திருவருளுக்கு நேரம் பார்த்து நின்றனர். இவரே நம் சரிதநாயக ராகிய ஸ்ரீ குமார தேவர் ஆவர்.

சோதனைகள்

பேரையூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் நிட்டை கலைந்துள்ள போதில் தமது வரவைக் குமாரதேவர் அறிவித்தனர். அனுமதிபெற்று அவரடி யடைந்து வணங்கி நின்ருர். சாந்தரும் வேந்தரை முழுக நோக்கிப் பின், தம்மிடமுள்ள தம்பிரானிடம், "இவன் அரசனைப் போலவே காணப்படுகிருன். ஆதலால், இந்த வழிக்குப் பாத்திரவானல்லன், இவன் தனது நாட்டுக்கே திருப்பிப்போய் அரசுபுரி யட்டும்" என்று கூறினர். இதைச் செவியேற்ற நம் குமாரதேவர் நெஞ்சம் பதைத்தது, எனினும் தம்

வாய்திறந்து ஒன்றும் பேசாமல் மவுனமாய் நின்றனர். அது கண்ட தம்பிரான் "இவ்வரசிடம் அதிதீவிர பக்குவியான சற்சீடனுக்குரிய சகல குறிகளும் விளங்குகின்றன" என்று விண்ணப்பித்தனர். அதன்பின் சாந்தலிங்க சுவாமிகள் "அப்படியானல் இவனை நமது எருதுக்குப் புல்லறுத்து வருமாறு செய்க" என்று கட்டளையிட்டனர். அங்ஙனமே அத்தம்பிரானும் நம் தேவரிடம் அரிவாளும் கயிறும் தந்தனுப்பினர். ஞாஞசாரியரையடைந்து அவரது திருவருளுக்கு இலக்காவதென்பது எளிய காரியமன்று. இதனலேயே "தன்னைத்தானறிய எண்ணும் தக்க சீடன் தன் குருவை மர்க்கடமாப்பற்றல் நீதி" என்றனர் பெரியோரும். நம் சுவாமிகள் மனத்தில் சிறிதும் சஞ்சலமின்றி அரிவாளும் கயிரும் கொண்டு வயற்புலம் சென்றனர், ஆங்குள்ள பள்ளர்கள் புல்லரிதலைக்கண்டு தாமும் அங்ஙனமே அரிய எண்ணி வில்லைப்பிடித்த கையால் புல்லைப்பற்றினர். பெருவாள் பிடித்த கரத்தில் அரிவாளைப்

பிடித்து அறுக்கலுற்ருர். அந்தோ! பழக்கமின்மை யால் அரிவாளால் தம் கையையே அறுத்துக் கொண்டு விட்டார். அப்போதும் ஒரு சிறிதும் வருந் தாமல் வலது கையைச் சினந்து கொண்டிருந்தார். இக்காட்சியை அங்குள்ள பள்ளர்களறிந்து இவரது வரலாற்றினையும் தெரிந்து மனமிக இரங்கித் தாமே புல்லறுத்துக்கட்டிச் சுமையாக்கி அதனைச் சுமக்கும் திறமும் இவர்க்கில்லாமையைக்கண்டு தாங்களே மடாலயத்தின் புறத்தே கொர்ணந்து வைத்துப் போயினர். இவ்விதம் இரண்டு தினங்கள் சென்றன. கையறுப்புண்ட செய்தியை நம் சுவாமிகள் யாரிட மும் தெரிவித்தனரில்லை. பிறகு பள்ளர்களால் இச் செய்தி முழுதும் கையேட்டுத் தம்பிரானுக்குத் தெரி யவந்தது. பின்னர் சாந்தலிங்கசுவாமிகள் இதனைக் கேட்டு நம் சுவாமிகளைச் சோதனை நிமித்தம் கோபித் தனர். அப்போதும், "ஊடுதல் காமத்திற்கின்பம்" ஆவதுபோல் இம்முனிவும் நமக்கு நன்றேதரும் என்றெண்ணி எல்லாம் சற்குருவின் திருவருள் என

வரளா இருந்தனர் குமாரதேவர்.

அப்பால், சாந்தலிங்கர் மீண்டும் நம் குமார தேவரைச் சோதித்தறியக் கருதிக் கையேட்டுத் தம் பிராணிடம் இருவேறு கட்டமுது மூட்டைகள் கட்டி ஒரு தண்டத்தில் மாட்டி அதனைக் குமாரதேவரிடம் தந்து தம் பின்னே அனுப்பிவைக்கும்படி கட்டளை யிட்டார். ஆற்றுணவைச் சுமந்துகொண்டு குமார ரும் தமது ஞான பிதாவின் பின்னே செல்லலானார். கொஞ்சதூரம்சென்றபின்னர் சாந்தலிங்கர் திரும்பிப் பார்த்து "என்ன தாமதம்" என்று அதட்டி கேட்டனர். அதைக்கேட்ட நம் சுவாமிகள், "ஆசாரி யரே! ஒருபுரம் அச்சுலிங்கமும் மற்றொரு மருங்கு கணையுத்தமும் இழுக்கின்றனவே" என்று ஞான விடை தந்தருளினர். இக்குறிப்பின் பொருளை உணர்ந்த பேரூரர் தமக்குள் மகிழ்ந்து ஒரு குளக் கரையை அடைந்து அமர்ந்தனர். உடனே ஸ்ரீ குமாரமுனிவரும் இரண்டன்னத்தையும் கலந்து

1102
01.3.32

தமதாசாரியருக்களித்து அவரருந்திய சேடப்பிரசாதத்தையும் உட்கொண்டனர். பிறகு இருவரும் ஞான விஷய சம்பாஷணை நிகழ்த்திக்கொண்டிருந்து மடாலயமடைந்தனர். அப்பால் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளுடன் சிலகாலம் அமர்ந்தருளித் "தத்துவமசி" மகா வாக்கியார்த்தமும், ஞான நிஷ்டையும், வேத ஆகம சித்தாந்த நுட்பங்களும், வீரசைவ சமயாநுஷ்டானங்களும், அறிந்தருளி ஆசாரியரின் பரிபூரண அநுக்கிரகத்துக்குப் பாத்திரராகிச் சாதனைகளில் தேர்ந்து பழுத்து விளங்கினர்.

திருமுது குன்றம் சேர்தல்.

தமது சந்ததியாகிய குமாரதேவர் தம்மைப் போலவே சிறந்த ஞானம் பழுத்த துறவியாக விளங்குவதைக் கண்டு ஸ்ரீசாந்தலிங்க சுவாமிகள், நம் சுவாமிகளை ஒருதினம் கடாக்ஷித்து, "மகாராஜாவே! அப்பா! நீ இனி ஈண்டிருக்கத் தேவையில்லை. விருத்தாசலம் அடைந்து அடியார்களுக்கு

சேலையூர் ஆதீனம்

அநுக்கிரகம் புரிந்துகொண்டிருப்பாய்! ஆங்குப் பெரியநாயகியம்மையாரின் திருவருளுக்குப் பாத்திரனுவாய்!'' எனப்பணித்து விடைதந்தருளினர் சற்குரு ஆணையைச் சிரமேற்றாங்கிய நம் முனிவர் தமதாசாரியரின் திருமுன்பை விட்டுப்பிரியமனமில்லாதவராய் அரிதிற்பிரிந்து சித்தசாந்தராய் விடைபெற்று விருத்தகிரியை நோக்கி நடந்து வரலுற்ருர்.

அங்ஙனம் வழி நடந்து வருபவர் ஒருநாள் சின்ன சேலத்துக்குக் கீழ்ப்புறமான காட்டு வழியிலே கடுக நடக்கலுற்ருர். அப்போது இவர்க்கு நீர் வேட்கையால் ஆயாசம்மிக்கிருந்தது. அடியார் படுந்துயரை ஆண்டவன் பார்த்து மனம் சகிப்பனே! ஆகவே பழமலநாதர் ஒரு வீரசைவ வேதியர் வேடம் பூண்டு வழிக்கரையிலே தண்ணீர் பந்தல் ஒன்று நிறுவிச் சுவாமிகளை நோக்கி, "அப்பா! நீ ஆயாசம் உடையவனுகக்காண்கிருய்! நால்வகை ஜலமும் இங்கு உண்டு. நீயும் பருகித்தாகமும் சோக

மும் நீங்கிச் செல்லலாம்" என்றனர். அதுகேட்ட குமாரரும் தந்தையாரருளிய தீர்த்தம் உட்கொண்டு களைப்பொழிந்து, துதி கூறி மேல் நடக்கத் தலைப் பட்டுத் திருமுதுகுன்றத் திருத்தலமடைந்து மணி முத்தாநதிதீரத்து அரசமரநிழலில் வந்தமர்ந்து வழி நடந்த அயர்வினால் சயனித்துப் பிரமானந்த நித்திரை மேற்கொண்டிருந்தனர்.

பெரியநாயகியார் திருவருள்.

உலகமாதாவாகிய முதுகிரிப் பெரியநாயகியார் தமது குமாரர்களுள் ஒருவராகிய நம் குமாரதேவர் நிலைமையினை அறிந்து அவரை ஆட்கொள்ள எண்ணித் தமது அபிடேக நிமித்தம் வைக்கப்பட்டிருந்த ஆவின் பாலைப் பொற்பாத்திரத்தில் ஏந்திவந்து சற் பாத்திரராகிய நம் சுவாமிகள் தலைமாட்டிலமர்ந்து தம்மடிமீது அவர் முடியை வைத்துப் புகட்டியருளினார். அழுத குமாரருக்குப் பால்அருத்தியதே யன்றி அழாதுரங்கிய குமாரர்க்கும் பாலளித்த நம் பெரிய

நாயகியாரின் பெருங் கருணைத்திறத்தை நாம் என்னென்பது!! கருணையே திருமேனியாகக் கொண்டவ ளன்றோ நம் அன்னையார். கண்ணைத்திறந்தார் சுவாமிகள், "அம்மா; நீர் யார்?" என்றனர். பெரிய நாயகியாரும் நடந்ததைத் தெரிவித்து என்றும் தம் பால் இருந்திடுமாறு பணித்தருளி மறைந்தனர். சுவாமிகளும் அம்மையார்கருணைத்திறத்தை வியந்து

"மரகத வடிவும்மதித்திரு முகமும்
மலர்க்குழலுங்குறு நகையும்
கரகம லமுங்கூர் விழியும் செவ்வாயும்
கச்சணி தனமுநூ லிடையும்
அரகர என்போர்க் களித்திடும் பதத்தோ
டுஞ்செலன் றென்னெதிர் தோன்றி
உரகதி யளித்த பெரியநா யகியை
உளத்தினி லிருத்திவாழ்த் திடுவோம்"

எனப் பலவாறு துதித்துப்பரவினர். ஆனந்த பரவசராய் அங்கேயே சக்சநிட்டை பூண்டு அமைந்திருந் தனர்.

தெய்வீக நிகழ்ச்சிகள்.

1. ஜடாமுனிக்கருளியது.

மல்லிகார்ச் சுன பருவதத்தில் வஞ்ச நெஞ்சம் பூண்டு வரம் வேண்டிய காரணமாகச் சிவபெருமானால் சாபமடைந்த தவ்சி ஜடாமுனியாகி விருத்தாசலத்தே மணிமுத்தாற்றோரத்திலே அரசமரத்திலே ஸ்ரீ குமாரதேவர் வருகையை எதிர்பார்த்த வண்ணமாக நெடுங்காலமிருந்து வரும் செய்தி முன்பே கூறப்பட்டுள்ளதல்லவா? அச்சடாமுனி நம் முனிவர் அம்மரத்தினடியில் தங்கியிருத்தலைத் தெரிந்தது நாடிய பொருள் கைக்கெட்டினாற்போல உளம் மகிழ்வுற்று, அந்தண்ணர் வடிவெடுத்து நம் சுவாமிகளை அடிபணிந்து, நின்றது. அங்ஙனம் தம்மைப் பணிந்தேத்தி நின்ற சடாமுனியின் வாயால் அதன் வரலாறெல்லாம் கேட்டறிந்த பின் சிவபிரான் ஆணைப்படியே சாபவிடுதலை செய்தருளினர். முனியும் முனிவராகி விடைபெற்றுப் போயிற்று.

2. குடும்பிக் கருளியது.

நம் குமாரதேவர் கரபாத்திரம் செய்து கொண்டு அவ்வூரிலே வாழ்ந்து வருவதையும் அவரது மகிமையையும் அறிந்த ஒரு குடும்பியானவன் நியமமாகச் சுவாமிகளை நாடோறும் வழிபட்டு வரலானன். இதனல் அவனுக்குச் சகல சம்பத்துகளும் பெருகின. இதையுணர்ந்த அக்குடும்பி ஏதேனும் ஒரு திருப்பணியைத் தனக்குக் கட்டளையிடும்படி வேண்டினன். சுவாமிகள் ஸ்ரீ பெரியநாயகியார் சந்நிதானத்துக்கெதிரிலே ஒரு மண்டபம் கட்டிவைக்குமாறு பணித்தனர். அவனும் அங்ஙனமே அமைக்கையில் கல்லுத்திரம் மேலேருமல் வருத்தந்தந்தது. உடனே அவன் இதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டான். சுவாமிகள் திருநீறளித்து அக்கல்லை மேலெழச்செய்தனர். அங்ஙனமே மேலெழ உதவியருளிய இரண்டு துவாரபாலகர்களின் முதுகும் உரைப்பட்டிருப்பதையும் அவனுக்குக் காட்டித் தவன

கஞ்சி காய்ச்சி நைவேத்தியமும் செய்வித்தருளினர். அக்குடும்பியும் சுவாமிகளின் பிரபாவம் உணர்ந்து கட்டளைப்படி நடந்து பாக்கியவானாயினன்.

3. மீனுக்குயிரளித்தல்.

ஒரு நாள் ஸ்ரீ குமாரதேவர் கரபாத்திரத்திற்குச் சென்று ஒரு தெருவில் ஓர் இல்லறத்தான் வீட்டில் கையேந்தினர். அக்குடும்பி இவரது பெருமையறியாதவன். அவ்வீட்டினர் சமைத்து வைத்திருந்த மச்சத்தை அன்னத்தோடு கலந்து பரிமாறினர். அதுதெரிந்த நம் சுவாமிகள் குளத்தருகே செல்லலும் மச்சம் உயிர் பெற்றுக் குளத்திற் குதித்துப் போய்விட்டது. இதனைக் கண்டவர் அச்சமும் வியப்பும் ஒருங்கே எய்தினர்.

4. தொழு நோயாளற் கருளியது.

தொழு நோயாளனொருவன் சுவாமிகளைத் தினமும் தரிசனம் செய்து வந்தான். நோய் நாட்கு நாள்

அதிகரித்தது. வேதனை நொந்து கொள்ளும்படி வேதனை மிகுந்தது. சுவாமிகளைப் பணிந்து அலறி வேண்டினான். சுவாமிகளும் சிறிது திருநீறெடுத்து அவன் இடக்கையில் வைத்து வலக்கையால் அதனை மூடிக்கொள்ளும்படி கூறி, அம்மூடிய கரங்களுடனே பழமலை நாதர் திருமுன்புமாடத்திருக்கும் விக்கினேச்சுரரைக் காட்டி அங்கே சென்று கண்மூடி நின்று நடக்கும் அதிசயத்தைத் தெரிவிக்கக் கட்டளையிட்டார். அவனும் அவ்விதமே நின்றான். அப்போது அவ்விநாயகர் தமது துதிக்கையால் அவ்வீபூதியைப் பரிசித்ததை அவன் உணர்ந்து வந்து சுவாமிகளிடம் தெரிவித்தான். உடனே சுவாமிகள் அத்திருநீற்றைத் தாமும் தரித்துக்கொண்டு அவனுக்கும் தரிப்பித்துக் குஷ்டநோய் நீங்கச்செய்தருளினர், அவனும் நோய் நீங்கி மகிழ்வடைந்தான்.

5. திருவாரூரில் தேரோடச் செய்தமை.

ஒரு சமயம் ஸ்ரீ குமாரதேவர் திருவாரூர்ப் பெரு

விழாக் காணச் சென்றனர். தியாகேசர் தேரூர்ந்து வரும்போது மாடவீதியிலே நம் சுவாமிகள் இரதத்துக்கு நேரே நின்று பெருமானைத் தரிசித்துக்கொண்டிருந்தனர். அப்போது பெரியார் பெருமையுணராத பேதையரிருவர் விகடமாக "வீ ர ் சை வ ம ரு ளை ப் பா ர் த் தீ ரோ" எனப்பேசி இகழ்ந்தனர். இது கேட்ட நம் குமாரதேவர் மகாதேவரை நோக்கி, "இவர்களுரைப்பது போல் வீரசைவம் மருளானால் இரதம் நடக்கட்டும்; அருளானால் நிற்கட்டும்" என்று கூறினர். தேர் நின்றுவிட்டது. சுவாமிகள் கொஞ்ச தூரத்திலுள்ளதொரு தருநிழலிலமர்ந்தனர்.

இரதம் நின்றுவிட்ட செய்தியைத் தஞ்சை மன்னனான் தர்மகர்த்தனறிந்தான். அவன் இரதம் நிலைக்கு வந்தபின்பே உணவருந்தும் நியமமுடையவன் நடந்த விவரம் அறியாதவனாகி அம்மன்னன் அன்று மாலைவரையில் முயன்றான். பயன்படவில்லை. மன்னன் மிகவும் மனம் நைந்தான். விரதம் தவறு

கிறதே யென வேதனை அடைந்தான். இத்தருணத்தில் மேற்குறித்த செய்தி அவன் செவிக்கெட்டிற்று. உடனே மன்னன் அடியார்களுடனும், பரிவாரங்களுடனும் நம் சுவாமிகளிருப்பிடமடைந்து பிழை பொறுத்தருளப் பெரிதும் வேண்டினன். தயா சாகரராகிய நம் குமாரதேவரும் இரதத்தினிடம் போந்து " பெருமானே, தயாநிதியே! வீரசைவம் அருளானால் இவ்விரதம் நடப்பதாக! மருளானால் நிற்கட்டும்! " என்றனர். இரதமும் யாவரும் அதிசயிக்க விரைந்து நிலைசேர்ந்தது.

6. மாந்திரீகனை மருட்டி மாகாளிக்கருளியது.

ஸ்ரீ குமாரதேவர் திரும்பித் திருமுதுகுன்றம் வந்தடைந்தனர். எப்போதும்போலவே அரசமரத்தினடியிலே எழுந்தருளியிருந்தனர். இவ்விருத்தாசலத்திலே பத்திரகாளிகோட்டம் ஒன்றுண்டு. இந்தக் காளியைத் தன் கைவசப்படுத்திக்கொள்ளுமாறு பிறநாட்டு மந்திரவாதியொருவன் கருதினன். இதை

யறிந்தனள் பத்திரகாளி. ஒரு ஸ்திரீ வடிவத்தோடு ஸ்ரீ குமாரதேவரிடத்தே வந்து வணங்கி, அம்மாந்திரீகன்கருத்தையும்அவன் வருகையையும் அறிவித்து அபயமளிக்க வேண்டினள். உடனே அக்காளிதேவியின் விருப்பப்படியே அவள் கோட்டமேவித் தமது திருவடியை அக்காளியின் உருவச்சிலையின் முடிமீது வைத்தெடுத்தனர். இதனால் மந்திரவாதியின் கண்களிரண்டும் குருடாயின. உடனே அவன் திகிலடைந்து யாரேனும் ஒரு மகான் இத்தலத்தில் இருக்கக்கூடுமென மதித்துக்கேட்டறிந்து ஸ்ரீ குமாரதேவர் இருக்கையை அடைந்து தனது பிழைபட்ட எண்ணத்தையும் விண்ணப்பித்துக் கண்ணைத் தருமாறு கனிந்து பரவினன். அது கண்ட நம் குருமூர்த்தி திருவுளமிரங்கி, அம்மாந்திரீகனைச் சரீரமுள்ள அளவும் மாந்திரீகத்தொழிலை விட்டிருக்கப் பணித்து ஒரு கண் மாத்திரம் தெரியும்படிக் கடைக்கணித்தனர். அவனும் கிடைத்தது லாபமெனக்கொண்டு சுவாமிகளை வழிபட்டுத் தன் நாடடைந்தனன்.

திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளைச் சீடராக அடைதல்.

ஒரு செல்வந்தருக்குப் புத்திரப்பேறில்லா வருத்த மிக்கது. அதனால் மனையாளொடும் அவர் நம் சுவாமிகளைத் தினம் பணிந்து வந்தனர். அவர்களது விருப்பத்தை அறிந்த ஸ்ரீ குமாரதேவர் குமாரருண்டாக ஆசீர்வதித்து விபூதி அளித்தனுப்பினர், அப்பிரசாத மகிமையால் அச்செல்வந்தருக்கு இரு புத்திரர்கள் தோன்றினர். இருவரும் ஐந்தாண்டடைந்தபின் வித்தியாப்பியாசம் செய்விக்கப் பெற்றனர். பிறகு இலக்கண இலக்கியங்களில் நல்ல தேர்ச்சி உண்டாகும் நிமித்தம் அச்செல்வந்தர், மதுரை வாசியாகிய இலக்கணப் புலவர் சிதம்பரம் என்பவரை வரவழைத்துக் கல்வி கற்பிக்கும்படி செய்தனர். இரு பிள்ளைகளும் அவ்வித்துவானிடம் கல்வி பயின்று வந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் நம் குமாரதேவர்

அவ்வீட்டிற்கு வர நேர்ந்தார். சிதம்பரம் என்பார், நம் சுவாமிகளை மதித்தனரில்லை. அது கண்ட நம் சுவாமிகள் இவரை அடிமையாக்கிக்கொள்ளக் கருதி ஒரு வாக்கியத்திற்கு அர்த்தம் கூறுமாறு கேட்டனர். புலவருக்கு நாவெழவில்லை. சுவாமிகளின் திருவடியில் வீழ்ந்து தம்மை ரக்ஷிக்குமாறு வேண்டினர். அதுமுதல் துறவு பூண்டு குமரகுருவின் பின்னேயே சஞ்சரிக்கலாயினர்.

பிறகு ஸ்ரீ குமாரதேவர் சிதம்பரம் என்னும் சீடரோடும் திருப்பேரூர் சேர்ந்து சாந்தலிங்க சுவாமிகளைத் தரிசித்துத் திருப்பணி இயற்றிக் கொண்டிருந்தார். பின்பொருநாள் தமது ஆசாரியர்பால் சிதம்பரம் என்பவரையும் ஆட்கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர், "நமக்குள்ள சந்ததி போதும். நமது சந்ததிக்குச் சந்ததி நெடுநாளாயில்லாதிருப்பதால் இவனை அழைத்தேகிப் பக்குவமறிந்து போதனை செய்து அடிமையாக்கிக்கொள்ளுவாய்" எனக் கட்டளை தந்தருளினர்.

இதுவே மகாப்பிரசாதமெனமதித்து ஸ்ரீ குமார தேவரும் சிதம்பர சீடரோடும் விருத்தாசலம் எழுந்தருளி அவரது பக்குவம் சோதித்துப் போதித்துத் தொண்டராக்கிக் கொண்டனர். இச்சிதம்பர சுவாமிகளே பிறகு நம் குமாரதேவரருளப்பாட்டின்படியொழுகித் திருப்போரூர்ச் சந்நிதானம் விளக்க நேர்ந்தனர். இவரே சாந்தலிங்க சுவாமிகளுடைய நூல்களுக்கு உரையும் வகுத்துத் திருப்போரூர்ச் சந்நிதி முறை என்ற நூலும் இயற்றியருளினர். தமதாசிரியராகிய ஸ்ரீ குமார தேவரைப் பரவி நெஞ்சுவிடு தூது, பதிகம் முதலிய நூல்களையும் அருளிச் செய்துள்ளார்.

சாத்திரங்கள் அருளிச்செய்தது.

ஸ்ரீ குமாரதேவர் விருத்தகாசி க்ஷேத்திரத்திலே ஞான நிஷ்டானுபூதிச் செல்வராய் வீற்றிருக்கையில் இவரைக்கொண்டு உலக மக்கள் உண்மையறிந்துய்யும் பொருட்டுச் சாஸ்திரங்கள் செய்விக்க வேண்டு

மென்று ஸ்ரீ பெரியநாயகியம்மையார் திருவுள்ளங் கொண்டனர். அதனைக் குமாரதேவரிடம் அவரது யோகநிலையில் தெரிவித்தனர். சுவாமிகள் அடிமையால் சொல்லமுடியாதென விண்ணப்பித்தலும் அம்மையார், "நாமே உனது செந்நாவில் நின்று செப்புகின்றோம்" என்று அருள் செய்தனள். அவ்வண்ணமே ஸ்ரீ குமாரதேவரும் பதினாறு திவ்விய சாத்திரங்களைச் சாற்றியருளினர். அந்நூல்களின் பெயர்கள் பின் உள்ளனவாகும்.

1. மகாராஜா துறவு
2. சுத்தசாதகம்
3. விஞ்ஞானசாரம்
4. அத்துவித உண்மை
5. பிரமானுபூதி விளக்கம்
6. ஞானவம்மானை
7. தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம்
8. தசகாரியக் கட்டளை
9. சகச நிட்டை

10. உபதேச சித்தாந்தக் கட்டளை
11. பிரம சித்தியகவல்
12. சிவதரிசன அகவல்
13. ஆகமநெறியகவல்
14. வேதநெறியகவல்
15. பிரமானுபவ அகவல்
16. சிவசமரசவாத அகவல் என்பன.

பரிபூரணம்.

ஸ்ரீகுமாரதேவ சுவாமிகள் இங்ஙனம் ஞானநிஷ்டாபரராய் பற்பல அருஞ் செயல்களை நிகழ்த்தி, அளவற்ற அடியார்கட்கு அநுக்கிரகம் புரிந்து, தமக்குப் பின்பும் உண்மையுணர்ந்து மக்கள் ஒழுகவேண்டி வேதாகமசாரங்களாகப் பல சாத்திரங்களை இயற்றியுதவி விருத்தகிரியிலேயே வாழ்ந்து வந்தனர். இவரது அளவற்ற அடியார்களுள் இரண்டாவதுஅடிமையாக விளங்கும் பேறு பெற்றவர் ரெட்டி — சிதம்பர சுவாமிகள் ஆவர். இவர் தமது ஞானாசாரியார்

விரைவிற் பரிபூரணமடைவாரெனத் திருவருளா லுணர்ந்து ஸ்ரீ குமாரதேவரை நோக்கி, "அருட் குருவே! அடியார்கள், தேவரீர் பரிபூரணமடைந்த பின் தரிசனம் செய்து உய்யும் பொருட்டு ஏதேனும் ஒரு திருப்பணியை அடியேனுக்குக் கட்டளையிட்ட ருள வேண்டு" மென வேண்டினர். அதுகேட்ட நம் சுவாமிகள் "நாம்மறைந்தபின்னரும் நம்பெயருரிருக்க வேண்டுமா" எனக் கூறிவிட்டு அகண்ட பரிபூரண சாக்ஷாத்கார சொரூப வியாபகத்திற் கலந்தருளினர். இங்ஙனம் இவர்கலந்தருளிய நன்னாள் புரட்டாசிமீ பூர்வபக்ஷம் சதுர்த்தசி ஆகும். பின்பு ரெட்டி - சிதம்பர சுவாமிகள் ஸ்ரீ பெரியநாயகியம்மையார் ஆக்ஞையின்படி ஸ்ரீ குமாரதேவர் திருப்பெயரால் கோயிலும்மடாலயமும் நிருமித்து வாழ்ந்துவந்தனர். ஸ்ரீ குமாரதேவர் எழுந்தருளியிருந்த காலம் இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டு கட்கு முந்தியதாகும் எனத்தெரியவருகின்றது. வீர சைவ சமயாசாரிய திலகராகிய நம் ஸ்ரீ குமாரதேவர்

திருவடிகள் எஞ்ஞான்றும் வாழக்கடவன! இவரது ஞான பரம்பரை என்றும் சிறப்புற்று விளங்குமாறு ஸ்ரீபெரியநாயகியாரைச்சிந்தித்து வணங்குகின்றோம்.

அருள்சாந்த லிங்கமுனிக் கன்பா போற்றி
அத்துவித சித்தாந்த மருள்வோய் போற்றி
மருள்சாந்த மனந்தெருட்டு மகிபா போற்றி
மங்கைநா யகியருள்கொள் மகனே போற்றி
தெருள்சார்ந்த யோகநிலைச் செல்வா போற்றி
தேனேநற் கோனேயெம் மானே போற்றி
பொருள்சார்ந்த பழமலையெம் புனிதா போற்றி
பொற்குமர தேவ! பதம் போற்றி போற்றி

முற்றிற்று.

அநுபந்தம்

பாட்டு.

ஐந்தொழிலி னுலகற்றி யநுக்கிரக மொன்றும்
அருளுடனே கொண்டுபர திருஞானவடிவாய்
வந்தருளித் தீவகத்தாற் பறவையகப் படுத்து
மாறதுபோ ெலுயேனை வழியடிமை கொண்டு
சிந்தைதனிற் சிவஞானப் பேரொளியைக் காட்டித்
திரிமலவல் லிருடுரந்து சிற்சுகத்தே வைக்கும்
நந்துலவு நதிபுடைசூழ் முதுகிரிவாழ் குமர
நாயகனைத் தூயவுளத் தேமிகவைத் திடுவாம்.

ஸ்ரீ குமாரதேவ சுவாமிகளின் முதற்சீடராகிய திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் பல்கால் நம் சுவாகளுடனிருந்து பழகியவர். கூர்ந்து நம் சுவாமிகளைத் தரிசனம் செய்தவர். நம் சுவாமிகளின் வேதாந்த சார ஞானமிருத வசனங்களை அடிக்கடி செவிகுளிரக் கேட்டுத் தெளிந்தவர். இத்தகைய பெரியார், நம் ஸ்ரீ குமாரதேவமூர்த்திகளின் திருவுருவத்தைத் தாமியற்றிய “நெஞ்சுவிடு தூது” என்னும் நூலிலே அழகுபடக் கூறியிருக்கிறார். அவ்வசனங்களினின்றும் அடியார்களாகிய நாமனைவரும் ஸ்ரீ குமாரதேவ

சுவாமிகளின் திருவுருவ பாவனையை உள்ளக் கிழியில் எளிதின் எழுதி வழிபடலாகும். அவர் கூறும் சொரூப வருணனை பின்வருமாறுள்ளது :—

யாவராலும் கொண்டாடப்படும் ஸ்ரீகுமாரதேவர் என்கிற திருநாமமுடையவர், உள்ளிருக்கும் சிவ ஞானமே வெளியிலும் பூத்தாற்போல விளங்கும் திருவெண்ணீறணிந்த திருமேனியினை யுடையவர். குற்றமற்ற அக்கமணிமாலையினை அணிந்தவர். நான்கு முழத்துவராடை உடுத்தவர். அதன் மீது உதரபந்தமணிந்திருப்பர். விரிந்த செஞ்சடை பின்னே தொங்கவிட்டிருப்பர். மருமத்து இலிங்கம் தாங்கியிருப்பர். புண்டரஞ்சேர்ந்த திருநெற்றியும், மதி போன்ற சோதி முகமும், கமல விழியிணையும், அழகிய நாசியும், மஹா வாக்கியத்தை மொழிந்தருளும் புன்முருவலோடு கூடிய மலர்வாயும், கனக செப்புக் குண்டலங்களணிந்த காதிணையும், திண்புயமும், புனிதத் திருமிடறும், காண்போர் கண்களுக்கு இன்பஞ் செய்யும் திருமார்பும், நிச்சயம் சொல்முறை

கொண்ட திருக்கரமும், சிவபரம்இரண்டும்ஏகமெனக் குறிக்கும் சின் முத்திரைக் கரமும்,பழவடியார்க்கின்ப வெள்ளம் வற்ருதளிக்கும் தாமரையொத்த திருவடி களும் கொண்டு கழுநீர்த் தொடையல் பூண்டு தெய் வத் தோற்றமாக விளங்குபவர்.

மேற்கூறிய வருணனையால் ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள் குன்ரு எழிலுடைய குமரனே போலும் பேரழகுடையாரென விளங்குகின்றது. தாம் ஞான கைவல்லியம் பெற்றவராயிருப்பினும் தமது சற்குரு வாகிய ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளே அடிக்கடி தரிசித் தும், அவர்க்குப்பணிவிடை புரிந்தும், ஆசிரியர் ஆக்ஞை வழியே ஒழுகியும் வாழ்ந்தமையால் இவரது அளவுகடந்த குருபக்தியை நாம் அறியலாகும். அரச செல்வத்தைப் பொருளென மதியாமல் அதைநொடி யில் விட்டகன்ற பான்மையினே நோக்குங்கால் இவர் பற்றற்ற பரமயோகியென்பதை எளிதின் உணர லாம். இவர் இயற்றியருளிய மகாராஜா துறவுஎன்ற நூலும் இவர் தம் சுவாநுபவத்தையே பெரிதும்

விளக்கிக்காட்டும் பெற்றியது. தமது ஞானசிரியர் விதித்த சோதனைகட்கெல்லாம் மனங்கலங்காமலும் வெறுக்காமலும் இவர் நடந்துகொண்டமையால் இவரைப் பொறுமைக் கடல்என்னலாம். இவர்கூறும் அவையடக்கங்களால், இவர் தெளிந்த ஞானமும் கல்வியும் உடையவராயினும் அகந்தையொரு சிறிது மில்லா அருந்தவத்தர் எனத்தெரியலாம். சமயங்கள் பலவும் பற்பலவாறு மருண்டு கூறும் மகா வாக்கி யார்த்தங்களை ஒருமைப் படுத்திப் பொருந்து முறை யிற் புலப்படுத்தும் சுத்த சாதக முதலிய நூல்களால் இவரது தெளிவான் சமரசானுபவ ஞானம் புலனாகும். ஞானத்தெளிவும்,முத்தியுண்மையும், பிரமானுபவமும் இவர் நூல்கள் நமக்கு நன்குபுலப்படுத்துவனவாகும். அரிவையர்க்கும் ஞான விஷயம் விளங்கும்படி இவர் கருணை புரிந்துள்ளார் என்பதை ஞானவம்மானை யால் தெளியலாம். வேதாகமங்கள் ஆங்காங்கு பன்னி உரைத்துள்ள செய்திகளை மிகஅழகாக இவர் தொகுத்துக் கூறும் வன்மையுடைய புலவர்என்பதை

யும் இவரது வசனங்கள் அறிவிக்கின்றன. ஒவ்வொருவர் நெறியையும் தீரத்தெளிந்து சிவாத்துவித நெறிக்கிணக்கிக் காட்டும் இவரது மதி நுட்பம் பெரிதும் போற்றத்தகுவதாம். சுருங்கக் கூறின், இவரை வீரசைவ சமயத்துக்குச் சிறந்த அரணம் வகுத்த ஆசாரியர் என்னலாம். பல நதிகளையும் தழுவிக் கொள்ளும் பரந்த கடல்போலத் துவிதம், விசிட்டாத்துவிதம், அத்துவிதம், முதலிய பல நெறிகளையும் தழுவிக்கொண்டுள்ள பொது நீர்மையும், பெருநீர்மையுடையது. வீரசைவசமயம் என்பதை நம் சுவாமிகள் பல்வகையாலும் பகர்ந்துள்ளபரமாசாரியராவர். மற்றும் இவர் பெருமை விரிப்பிற் பெருகும்.

முற்றுப்பெற்றது.



சிவமயம்

திருப்போரூர்
சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த
ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள் பதிகம்.

———::———

பதினான்குசீர் கழில்நெடிலடி ஆசிரிய விருத்தம்.

குமாரதேவர் அவதாரகாரணம்

கங்கையும் அரவும் திங்களுஞ் சடையுங்
கண்ணமர் பாலமுங் கமழும்
கடுக்கையொண் தொடையும் கரியுரி யுடையும்
காரிகை வாழிடப் புறமும்
பங்கயக் கண்ணன் விழியமர் பதமும்
பரிவுடன் கரந்தருள் உருவாய்ப்
பாரினி லடியர் பவக்கடல் துடைத்துப்
பணிப்பறு பிரமசா கரத்தின்
மங்கிடா தழுந்தித் தங்கவைத் தாள
வந்தனை எளியனேன் பவமும்
மாயுமென் றேத வழக்கதுண் டெனக்கு
மாய்த்திட லுன்கட னுமால்

கொங்கவிழ் குழற்கூட் டகிற்புகை வேள்விப்
புகையொடும் குழுமுறும் விருத்தக்
குன்றினி லமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே!

கபாலம் - கபாலம், முதற்குறை; கடுக்கை - கொன்றை; தொடை - மாலை; கரந்து - மறைத்து; பனிப்பு - குளிர்ச்சி, நடுக்கம், அச்சம்; ஆமால் - ஆல், அசை; கொங்கு - வாசனை; குழற்கு - ஊட்டு.

குமாரதேவர் திருக்கைத் திருநீறு முதலியவற்றின் மகிமைகள்.

செங்கையின் நீறு பெற்றுளோர் வெய்ய
தீவினை அற்றுளோர் நின்தாள்
திகழ்புனல் உண்டோர் அன்னையர் கொங்கைத்
தீயபால் மீட்டுணார் நின்னை
அங்கையால் தொழுதோர் சிரத்தினல் பணிந்தோர்
அவனிபொன் உலகினைப் புரக்கும்
அரசராய் வாழ்ந்து வீட்டினை அடைவா
ராமெனின் நின்பெரு மையினை

இங்குநான் மறையும் சேடனு யிரவாய்
இரட்டைநா வும்புகழ் வரிதாம்
என்னவே துணிந்தும் எளியனேன் புகழ்வான்
எண்ணிடல் நகைப்பதாம் அன்ரே
கொங்கைகள் ததும்ப மங்கையர் சிலம்பு
குமுறவே நடித்திடும் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே !

வெய்ய - கொடிய; குமுற - சப்திக்க.

திருக்கரத்தின் பெருமை

அஞ்சலென் றுன்கை அடியனேன் முடியில்
அருளொடும் வைத்துமா மலர்மேல்
அயனியா னுதிக்க அனுதினந் தீட்டும்
ஆணியை நாணுற முறித்தாய்
வெஞ்சினத் தறுகண் செங்கணேற் றெருமை
மேல்வருங் காலனு ரென்னை
வீக்குவன் பாசக் கயிற்றினை அறுத்தாய்
வினையனேன் தனக்கினி தமைத்த

எஞ்சலில் இருபத் தெட்டுயர் கோடி
எனுநர கக்குழி அனைத்தும்
இடருடன் அகலத் திடரது செய்தாய்
ஏழைமேன் இயற்றுகைம் மாறென்
குஞ்சரக் கோடும் தரளமும் அகிலும்
கொணருமுத் தாறுசூழ் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே

அஞ்சல் - பயப்படாதே; அயன் + யான்; தறுகண் - அஞ்சாத்தன்மை; வீக்கு - கட்டு; எஞ்சல் இல் - குறைவு இல்லாத; திடர் - மேடு; குஞ்சரம் - யானை; தரளம் - முத்து.

உபதேச மகிமை

ஆம்பல்செந் தேறல் கொப்பளித் திடுதல்
அனையநின் வாய்மொழி வலிய
ஐம்புலம் என்னும் கரியினை அடக்கும்
அங்குச மோமன மென்னும்

மேம்படு புரவி கொட்புறல் அடக்கும்
வெவ்விய கலினமோ கொடிய
வினைதரு கருமேந் தியமெனும் வீர
விறலினர் தஞ்சிலு கடக்கும்
தூம்புடை எயிற்றுக் கட்செவிக் கயிறோ
துறந்திடும் உடலெனும் தேரின்
தொடக்கினை அறுக்கும் அரங்கோலோ அமுதோ
சுவைக்கரும் பேரகனி ரசமோ
கூம்பலின் றலர்ந்த நீலமும் சேலும்
குலவிய பண்ணைசூழ் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே.

தேறல்-தேன்; புரவி-குதிரை; கொட்புறல்-சுழலுதல். வேகமாய் ஓடுதல்; கலினம்-கடிவாளம்; கருமேந்தியம்-தொழிலுருப்புக்கள்ஐந்தும்; விறலினர்-காலாட்படையினர்; சிலுகு-துன்பங்கள்; தூம்பு-துவாரம்; கட்செவி-பாம்பு; கூம்பல்-வாடுதல், வாய்மூடுதல்.

பேரருள் திறம்

அந்திவெண் பிறையை அனையஒண் நுதலார்
அகில்கமழ் முகிற்குழல் தனக்கே
ஆலமும் அமுதும் அமர்ந்தகண் கயற்கே
ஆம்பலை அனையவாய் மொழிக்கே
கந்தடு களிற்றின் கோட்டினைக் கோங்கைக்
கமலநாள் முகையினைப் பழித்துக்
கனகமந் தரத்தைக் கடுக்கும்வண் நகிற்கே
காதலாய் அறநெறி மறந்திங்
கிந்தமா நிலத்தில் பிறப்பெனும் ஓரேழ்
இருங்கடல் இடைவிழுந் திளைத்த
என்னைநின் கருணைக் கலத்திடை இவர்வித்
தினியவீ டுறவருள் புரிவாய்
கொந்தவிழ் மலர்ப்பூம் பொங்கரும் எயிலும்
கோதறச் சூழ்தரு விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமர் முனியே.

நுதல்-நெற்றி; முகில்-மேகம்; கந்து-கட்டுத்தறி; நகில்-ஸ்தனம்; காலம்-மரக்கலம்; இவர்வித்து-ஏற்றி; எயில்-மதில்; கோது-குற்றம்.

முனிவர் பெருமை

அருக்கனே அகத்தில் ஆணவ இருளுக்
கன்றிய மாயையாம் வெய்யில்
அகற்றிட எண்ணெண் கலைகளால் நிறைந்தே
அருளமு தந்தனைப் பொழிந்து
திருக்கிளர் அடியார் கண்மலர்க் குவளை
திறந்துநீர்த் தேன் பொழிந்திடவே
சிவப்பிரகாசங் காட்டிமீ தெழுந்த
திங்களோ கார்மிகம் என்னும்
சுருக்கமில் கடற்கு வடவையோ பாவத்
துகளெனும் காட்டினுக் கனலோ
துன்னிய காமக் கனற்குமா முகிலோ
சுடரும்நின் பதத்தியல் புணரேன்
குருக்கிளர் மணிகள் குயிற்றுபொன் மாட
கூடங்கள் ஒளிர்தரும் விருத்தக்
குன்றினில் அமர்ந்துவிளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே.

அருக்கன்-சூரியன்; கார்மிகம்-கன்மம்; வடவை-வடவை என்னும் பெரு நெருப்பு; துன்னிய-மிகுந்த, அடர்ந்த; குரு-நிறம்.

வரம் வேண்டுகை

விரைவுறும் அந்தக் கரணமோ டுழன்றும்
வீண்படு விடயமே விழைந்தும்
மிகுத்திடு காம குரோதமே முதலா
மேதையில் குணங்களால் மெலிந்தும்
தரையினில் துக்க சுகமவை அடுக்கும்
தன்மையால் அனுதினம் தளர்ந்தும்
தக்கவே டணைகள் மூன்றினுல் தவித்தும்
சாலவே மயங்குமென் தன்னைக்
கரையறு முததி இலவண நீரைக்
கார்முகந் தைக்கச டறத்தீங்
ககலவே செய்யு மாறுபோல் நீயென்
கசடறுத் தாண்டருள் புரிவாய்
குரைகடல் எழுந்த இனன் இவர் தேரைக்
குளிர்பொழில் தடுத்திடும் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே.

விழைந்தும்-விரும்பியும்; ஏடணைமூன்று-தாரம், தனம் மக்கள்பிணிப்பு; உததி-கடல்; தீங்கலவே-எனவும் பாடம்; இனன்-சூரியன்.

நயன தீட்சை முதலியன

அரிய ஆணவமாம் அண்டம்விண் டடியேன்
அவனியில் வெளிப்படப் பெரிதும்
அரியதோர் கமடம் அழகிய வன்மீன்
அஞ்சிறைப் புள்ளிவை போலக்
கருதுநெஞ் சதனுல் உன்னியே கடைக்கண்
கருணையால் நோக்கியே பரிசம்
களிப்புடன் செய்தே அளிப்பது கொடியேன்
கணித்தினி தெங்ஙனம் அறிவேன்
எருமையின் குலங்கள் சரோருக மலரை
இக்கினைச் செந்நெலைக் கறிக்க
இருகடைவாயால் சொரியும்வெண் தரளம்
இளநிலா எறித்தலின் குமுதம்
குருமதி எனவே நனைமுறுக் கவிழ்ந்து
கொங்குயிர் பண்ணைசூழ் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே,

கமடம்-ஆமை; புள்-மறவை; உன்னி-நினைத்து; சரோருகம்-தாமரை; இக்கு-கரும்பு; குமுதம்-ஆம்பல்.

வரம் வேண்டுதல்

இரவும் நண்பகலும் இலாதமத் தியத்தில்
இருந்திடும் துருவனைப் போல
இரண்டுதட் டகத்தும் நிறைபொருள் சமனாய்
இருந்தநல் தராசுமுள் போலப்
புரையுறு சகல கேவல மதனில்
பொருந்திடா தினியசுத் தத்தில்
பொருந்தியே அகந்தை தவிர்ந்து நான் வாழப்
பொருந்தவைத் தாண்டருள் புரிவாய்
இரவியின் இரதம் இழுக்கும்ஏழ் பரியின்
எழில்குரம் தாக்கவே தெங்கின்
இருங்கனி தகர்ந்தங் கிழிந்திடும் இளநீர்
இலஞ்சியில் பண்ணையில் ததும்பிக்
குரைபுனல் முத்த நதியினில் பெருகும்
குறைவிலாச் சீர்திகழ் விருத்தக்
குன்றினில் அமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே.

புரை-குற்றம்; பரி-குதிரை; குரம்-குளம்பு;
இலஞ்சி-குளம், ஏரி.

திருவடி தீட்சை

கன்றினுக் கிரங்கிக் சுரபிவந் தின்பால்
கதறியே இனிதளித் திடும்அக்
கன்றினல் சுரபிக் கணுவளவேனும்
கருதுகைம் மாறிலா ததுபோல்
ஒன்றுநன் கறியா ஏழையிங் கிவனென்
றுன்னிரு தாட்சரோ ருகம்என்
உச்சிமேல் வைத்துத் தலையளி செய்தாய்
உன்க்குநான் செய்வதொன் றிலதால்
துன்னிய செந்நெல் கன்னல்பூங் கதலி
தோமறு பூகம்ஒண் தெங்கு
துருமமும் நெருங்கி வரிசையின் இருத்தல்
சுரர்இழிந் தேருதி மூழ்கிக்
கொன்றைமா லிகையான் பதந்தொழு தேகும்
படியெனக் குலவிடும் விருத்தக்
குன்றினி லமர்ந்து விளங்கிவீற் றிருக்கும்
குமாரதே வென்னுமா முனியே.

சுரபி-பசு; தலையளி-பேரருள்; கன்னல்-கரும்பு;
கதலி-வாழை; தோம்-குற்றம்; பூகம்-பாக்குமரம்;
துருமம்-மரங்கள்; கற்பகம்-குங்குமமரம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள் அருளிய

விருத்தாசலம்

ஸ்ரீ பெரிய நாயகியம்மன் பதிகம்.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

கிரியை அறுதல்

விரிவுறும் உருவம் நாமம தகற்றின்
விடயங்கள் விளங்குறு; இதனால்
மருவுறு பொறிபோம்; பொறியறக் கரணம்
மாய்ந்துறும்; கரணமாய் தலினால்
புருடன்முன் ஏழும் சுத்தமோர் ஐந்தும்
போமிதால் சச்சிதா நந்தம்
கிரியைஅற் றிலங்கும் என்றனள் விருத்த
கிரியமர் பெரியநா யகியே

இன்பப்பேறு

உளப்படும் உருவ நாமமகற்றின்
உள்ளசற் சிற்சுகம் தோன்றும்;
வளப்படும் இதனால் உலகுகண் ணாடி
வருநிழ லாம்; நிழல் மறிந்தால்
விளக்குறும் ஞான வெளியதாம்; இதனின்
விளையும்இன் பெனஎனக் கிசைத்தான்;
கிளக்குறு தவத்தோர் தரித்துரை விருத்த
கிரியமர் பெரியநா யகியே

ஞான தரிசனம்

பழுதைஎன் றுணரின் தன்முனர்த் தோன்றும்
பாம்புமப் பழுதையாம்; அதுபோல்
முழுதுணர் அறிவாம் தன்னையே காணின்
முரணுறு சராசரம் எவையும்
எழுதரும் அறிவாய் விளங்குமென் றிசைத்தான்
எழுபவம் துடைத்தெனை அளித்த
கெழுமணி முதத நதிசெறி விருத்த
கிரியமர் பெரியநா யகியே

பந்தம் அறுதல்

சொருபமே தானென் றுணர்தரின் பரனும்
துகளுறு சீவனும் சகமும்
மருவுதன் நிலையில் எழுந்தமித் தைகளாம்
வந்திடு பந்தம்வீ டிலவாம்!
ஒருவுயிர் தானென் றுணரில்அம் மூன்றும்
உள: பந்தம் விடும்உண் டென்றால்!
கிரிதவப் பயனாய் வருமொரு விருத்த
கிரியமர் பெரியநா யகியே

ஞாதுருமுதலிய பாவனை நீங்கல்

அறிபொருள் அறிவோன் அறிவினைக் கொளும்
ஆனமுப் பொருளும்ஓர் விடயம் [போன்
பொறியுறப் பிடித்தால் உள; இதை விடுத்தோர்
பொருளைநா டுதன் முனர் இடையே
பிறிவறத தோன்றும் சொருபமிந் நிலையில்
பேசுமுப் பொருள்களும் இலவாம்;
கிறியற அறிதி என்றனள் விருத்த
கிரியமர் பெரியநா யகியே

கனவுநிலை

அரவிலே பழுக்கத உணர்ந்தவர்க் கதுபோல்
அகிலமெய்ப் பொருளினை உணர்ந்தோர்;
கொருவுரு திருத்தல் எனையெனிற் கானல்
உறுசல மிலையென உணர்ந்தும்
மருவலின் நாளு:விகாரமே தென்னின்
மலிகன வினிலுறும் என்ருள்
கிருதுசெய் மறையோர் பரவிய விருத்த
கிரியமர் பெரியநா யகியே

சிவசீவ ஒருமை

தடத்தின்மற் றதனில் தங்குபல் கடத்தில்
சாயையும் சடையையில் லதுமாய்த்
திடத்தொடும் விளங்கும் விசும்புபோல் ஈசன்
சீவனிங் கிருவர்சாட் சிகளாம்
இடத்துறும் பினையிற் ருேன்றுறும் சிவமிங்
கிருவர்சாட் சிகளுமொன் றென்ருள்
கிடைத்தநல் நிதியாய் எனக்குறும் விருத்த
கிரியமர் பெரியநா யகியே

பின்னமயக்கம்

ஆருயிர் தானும் அவன்மனம் தைச
தகங்கரத் துதித்தது வாகும்
பேருயிர் சாட்சி யானவன் மனமோ
பின்னையா மாதலால் அவற்குக்
கூருறும் உலக மயக்கமாம் இவற்குக்
குறித்ததன் லீலையாம் என்றருள்
கீரனை அளித்தோற் குவந்ததாய் விருத்த
கிரியமர் பெரியநா யகியே

பிரமநிலை

ஓதுரு நாம மகற்றிடின் தோன்றும்
உள்ளசத் சிற்சுகம் இதுவே
தீதறு சீவ சாட்சியிங் கிதனைத்
தெரிந்திடும் சீவனும் இதுவாய்
ஏதமொன் றில்லாப் பிரமமாம் என்றே
இருளற அருள்புரிந் தளித்தாள்
கேதமில் தவத்தோர் சூழ்தரும் விருத்த
கிரியமர் பெரியநா யகியே

அம்மை அருளை வியத்தல்

எஞ்சுறும் உளத்தோ டென்னையார் என்றே
இரங்கியே திரிந்துழல் வேளை
மஞ்சுறழ் காத்துக் கன்னனைக் குந்தி
மகனென உணர்த்துதல் கடுப்ப
அஞ்சலென் றழைத்து 'நீ அது ஆகும்'
ஐயமின் றென்னவே அளித்தாள்
கிஞ்சுக வாயால் உய்ஞ்சிட விருத்த
கிரியமர் பெரியநா யகியே

(முற்றிற்று)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

நெஞ்சுவிடு தூது.

காப்பு.

தஞ்சமென்றோர்க் கின்பந் தருகுமர தேவன்மே
னெஞ்சுவிடு தூது நிகழ்தவே — விஞ்சும்
பழமலைவா ழாழத்துப் பாழிமத வேழக்
கழலிணைவா ரீசமே காப்பு.

கலிவெண்பா.

பூவாய்த்தகற்பகப்பூம் பொங்கரிடத்திற்சிறந்தோன்
றூவாய்த்செங்கமலத் துள்ளிருந்தோர்-மாவாய்த்த 1
மார்பகத்தோனாகமுற்றோர் வஞ்சகக்கூற்றைக்கடந்த
சீர்மிகுத்தகாயத் திறன்முனிவோ-ரேர்மிகுத்த 2
மாணிக்கப்பைவிரித்து வாழுரகர்பாருறைவோ
ரரணிப்பொன்போன்றமறை யாகமங்கள்-பேணி 3

யுருவேயருவே யொளியேவெளியே
தெருளேயருளே சிவமே-பொருளேயென் 4

றேத்துஞ்சுகசொரூப மின்னருளேயோர்வடிவாய்-
நாத்துதிசெய்பேரு நயந்தருளி-தீர்த்தனென 5

வந்தபிராணுயேன் மலதிமிரம்போக்குதற்கென்
சிந்தைகுடிகொண்ட செழுஞ்சோதி-வந்தனைசெய் 6

யன்பர்க்கெளியா னதிகரேயாயிடினும்
வன்பர்க்கரிதாய மாணிக்க-மன்புக்க 7

மந்தரமேமத்தாக வாசுகியேநாணுகச்
சந்திரன் றூணுக்கடலே தாழியா-வந்தரர்தம் 8

வன்பிற்கடைய வருமமுதம்போன்றெழா
தன்பிற்பெருகியெழு மாரமுதந்-துன்பத் 9

திரையாழிவீழ்ந்தவரைத் தீதறியாமுத்திக்
கரைமேல்விடுக்கு மொருகப்பல்-விரவிவரு 10

மாகமேயாதி யநேகபிரபஞ்சமெலா
மேகமாய்க்காட்டு மெழிற்சித்தன்-மாகசுர 11

ரேமார்க்கவெம்மனே ரியாருமிருமாக்கக்
கோமாக்கருணைமழை கூர்மேகம்-பாமரருங் 12

கண்டபொழுதேகசிந்து கசிந்துள்ளுருகித்
தொண்டுசெயமேவுஞ் சுவைக்கரும்பு-பண்டு 13

பிரமனகந்தை பிறகாதடங்கப்
பரம்வொளியாப் படர்ந்து-சிரமனந்த 14
கோடிபடைத்துக் குலவுலகெலாந்தானாய்
மூடிநிலைபெற்ற முதுகிரியா-னீடிக் 15
குறிஞ்சியுணின்று குறவர்குடில்சாடி
மறிந்துவிழமாலியானை மாய்த்துச்-செறிந்த 16
வகிலுங்கழைமணியு மந்திரையாலுந்திச்
சிகிநிறச்செம்பாலைவெப்பந் தீர்த்துப்-பகரரிய 17
முல்லைபுகுந்து முடைகெழுமுமாய்ச்சியர்தம்
பல்லையொத்தமுல்லை பறித்தெறிதங்-கொல்லை 18
தயிர்ச்சாடிமத்துடனே தாங்கிமருதத்
தியற்பள்ளரார்ப்ப வெழுந்து-வயற்புடைக 19
ளேரிகுளங்க ளெலாநிறைத்துநெய்தநிலஞ்
சாரவெழுந்து தகும்பரவர்-நேரும் 20
வலைமலையெலாந்துணித்து வன்படவுதள்ளிக்
குலவுகடலோடுறவு கொண்டு-நிலவலைய 21
மாழமொடுநீள மளத்தற்கரிதாகி
யேழ்கடல்வெள்ள மெனச்சிறந்து-மூழ்குமவர் 22
தம்மையழுக்கறவே தான்றுடைத்தலன்றியுயிர்
வெம்மையழுக்கு மிகத்துடைத்து-செம்மைதரு 23

வீட்டின்பவெள்ளத்து மேன்மைபெறவேழுக்க
நாட்டுமணிமுத்தா நதியுடையான்- மீட்டரிய 24

மெத்துகடமாதி வெறும்பொய்க்கதிட்டானச்
சத்தெனுமோர்மேன்மைத் தகுநாடன்-மொய்த்து 25

வரும்பேருருவமாய் மன்னுபொருளெல்லா
மொருங்கேசுகமான வூரான்-விரும்பியமொய்த்ப் 26

பத்திப்பழவடியார் பைந்தமிழ்ச்சொன்மாமலரால்
வத்திக்கக்கட்டுபா மாலையான்-முத்திபெற 27

வோரறிவுகாணுமிடத் தொன்றென்றுஞ்சுட்டாது
சீரறிவாய்நின்றமனச் செம்பரியா-னேர்மருவு 28

பக்குவநான்கானபெரும் பாதங்கள்சோதிதர
மிக்கமறையாகமமாம் வெண்மனிகொண்டுக்காத 29

விச்சைஞானங்கிரியை யென்னுமுத்தானம்பொழிந்
கச்சமறத்துறத்த லாசையுறற்-றுச்சமது [தங் 30

கோடாகவேந்திக் குளிர்கருணைமெய்யுணர்வர்ம்
வீடாதகண்கண் மிகவிழித்துச்-சேடா 31

ரிரண்டற்றவத்துவித மென்னுங்கைநீட்டித்
தெருண்டதவம்பத்திச் செவிகொண்-டிருண்ட
[பெருந் 32

தத்துவசாலங்களெனுஞ் சாற்றுங்கவளமுண்ட
சுத்தமெனுஞ்சீர்வாய் துலங்கவே-பொய்த்த 33
கருமவீக்கூட்டங் கடியாதுவீசுந்
தருமமாநல்வா றயங்க-வொருமையிலா 34
வாறுசமயக் குருடரறியாத
வீறுபரிபூரணமா மேனியுடன்-கூறுமலம் 35
போகமுனிந்துயிரின் போதமழித்துத்தோன்று
மாகமிகளேத்து மறிவானையான்-ருகமுடன் 36
வந்துதனையடைந்தோர் வன்பவநோய்தீர்ப்ப [தற்கே
யந்தமறக்கட்டு மருட்கொடியான்-சந்ததமுஞ் 37
சேமநிதிபோற் றிகழ்மறைநான்கிற்சிறந்த
சாமமறையாந் தகுமரசோன்-காமர்செறி 38
கஞ்சனும்வேளுங் கடுங்கூற்றுந்தன்னடியார்க்
கஞ்சநடாத்துதிரு வாணையான்-விஞ்சியபே 39
ரின்பமுளந்ததும்ப வெல்லோருங்கொண்டாடு
நன்குமரதேவனெனு நாமத்தான்-மன்பயிலுஞ் 40
சாதனநான்கானபெருஞ் சம்பத்தைக்கைப்பிடித்து
மாதனமாதர் மனைதுறந்து-தீதறுசீ 41

ருள்ளிருந்தஞானம் புறனுமுதித்தாங்கு
வெள்ளைநிற நீறணிந்து மேனியெலாங்-கள்ள
[முறு 42

காமனைவென்றதிருக் கண்ணிற்பிறந்ததனல்
யாமவனைவெல்வதற்கீ தாமென்று-தோமறுசீ 43

ர்க்கமணிமாலை யதுதரித்துமவ்வுறுப்பின்
மிக்கபணியாய் மிகப்பூண்டு-தொக்கபகை 44

கொல்வார்மஞ்சற்றோய்த்துக் கூறைகொளுமாற
வெல்வான்கருதும் விருதாக-நல்லசெக்கர்[வித்தை45

காவிதோய்துண்டங் கருதுமுழநான்குகட்டி
மேவுகருவிப்படையை வெல்வதற்கு-தாவிலாக் 46

கச்சைகட்டினுற்போற் கனவுதரபந்தனமே
லெச்சமறக்கட்டி யிடர்ப்பிறவி-யச்சம் 47

பிரிந்ததெனக்காட்டுமொரு பெற்றிபோற்றோன்றும்
விரிந்தசடைபின்ருழ விட்டு-திருந்து 48

முயிரங்கமீதி லுயர்பரமலிங்கஞ்
செயலறவேதோன்றுந் திறம்போற்-பயனர் 49

மருமத்திலிங்க மகிமையுடன்றூங்கிக்
கருமத்துரிசு கழன்றே-யொருரித்த 50

நெஞ்சுடனே வீடுதொறு நீடுபிச்சையேதெனினும்
வஞ்சமறவேகரத்தில் வாங்கியுண்டு-விஞ்சுங் 51
குருபரனுமக் குமாரதேவன்பாற்
றிருவடிபெற்றஞ்ஞானந் தீர்ந்தே-யுருநாம 52
முள்ளவெலாஞ்சத்சித் சுகமாவொருங்குணர்ந்து
தெள்ளியபேரின்பவெள்ளந் தேக்கியே-விள்ள
[லிலா 53
தெல்லாஞ்சிவமயமாய்க்கண் டேபெற்றமாதவரு
மல்லார்திருவுடனே வாழ்ந்தாலு-நல்ல 54
விடையன்பாற்கும்ப மிருஞ்சென்னிதாங்கித்
தொடருமறிக்குட்டியுடன் றேற்பை-புடை
[யெடுத்துக் 55
கம்பளந்தண்டாதி கைக்கொளினுமச்சென்னிக்
கும்பமிசைநெஞ்சுவைத்த கொள்கைபோ-லெம்பி
[ரான் 56
ருளிலேநெஞ்சுவைத்துத் தாங்குடும்பிபோனடிக்கு
மீள்கிலாவன்புடையத் வித்தரு மாளாத் 57
தகைமையுடையோராய்த் தக்கபணிசெய்தே
யகமுமுகமும்மலர் வாருஞ்-சுகசொருப 58
மொன்றென்றேசென்னு லுலகமேதென்றிடவே
நின்றபழுதையிடை நீளரவ-மன்ற 59

வுதிக்குமாறப்பொருளி லுண்டாமென்றேத
விதித்தபழுதை விளங்கின்-மதித்தபாம் 60

பேகுமதுபோ லொழிற்சிவங்கண்டும்மூலக
மோகாதிதோன்ற லெனையென்ன-மோகமறக் 61

கானலினீரில்லையெனக் கண்டுநீர்தோன்றுதல்
[போ
வீனமில்பொய்யாத்தோற்று மென்றிசைப்ப-வான 62

பழுதையினிற்பாம்பும் பகர்கானனீரு
மெழுமோதகையா யிவைதாங்- குழுமியே 63

நாறுவயோர்பொருளி னண்ணுவதேதென்றிசைப்ப
வாறுதபொன்மண்ணி லாபரண-நாறு 64

கடமாதிதோன்றுமொரு காரணம்போற்றேற்றுந்
திடமாநீகாணென்று செப்பத்-திடவா 65

னொருவன்றேழிலா லுளவாமிவைதா
மருவுமிவையாவ ரால்வந்த துரையெனவே 66

விண்ணினிடைப்பீலி வெயிற்குஞ்சந்தோன்றுவபோ
னண்ணுமெனவே நயந்துரைப்ப-வெண்ணுமவை 67

பற்பல்வாறுலும் பகருருவொன்றுமிவைதாந்
துப்புடைநாறுவுருவாய்த் தோற்றுவதென்-செப்பு
தெனக் 68

காந்தருமாநகர்போற் காணெனவேயந்நகர்தான்
போந்தவிவகாரமின்றுப் பொய்யாகு-மேய்ந்த 69
விவற்றுள்விவகார மேய்வதெனன்னக்
கவற்றுள்கனவுவிவகார-நவிற்றுதல்போ 70
லாமென்றுரைப்ப வதுநினைவின்வாதனையாந்
தோமுறுபொய்வாதனை தான்றாதாய-சேமப் 71
பொருட்கேதெனவந்தப் பூரணத்திற்றோன்றுந்
தருக்காநினைவாகுந் தானென்-றுரைப்ப 72
வதற்குநினைவெழுமோ யாதென்றுகேட்பக்
கதித்தகனலீலை கண்டா-யிதைப்பொய்யென் 73
றுன்னுதுகேட்டி யுளஞ்சற்றறைத்தக்கான்
முன்னும்பரமுயிர்கண் மொய்த்தெழுந்த-மன்னு 74
வுலகமிவைதோன்று முளமிறந்தாலிந்தக்
கலகமெல்லாம்பொய்யாக் கனதை-யிலகியதோர் 75
மெய்யொன்றேயாகு மிளிருமுளத்துருவ்
நையாவுருவமொடு நாமமாம்-பொய்யுளந்தா 76
னுன்னினைவுதீதென்றே யூகத்தானோக்குமிடத்
தந்நினைவுநாமவுரு வாகுங்கா-ணந்நினைவு 77
கோடிகனத்திற் குதித்தெழலாலிவ்வுலகு
நாடற்கருவுருவ நாமமாய்ப்-பீடுபெறத் 78

தோற்றுநினைவைத் துணித்தாற்சற்சிற்சுகமே
மாற்றற்கரிதாய் வயங்கலுறுஞ்-சற்றுமிதா 79

லுள்ளமேயிவ்வுலகே யுள்ளமா
முள்ளமலாதேயுலக மொன்றில்லை-யுள்ளே 80

மதுரந்தருஞ்சாத்தான் வன்கோயின்முன்னே
சதுரங்கமாபலமாத் தங்கும்-குதிரைகரி 81

தேராளெனும்பெயருஞ் செப்பியபேர்கொள்ளுருவு
நேராதுபொய்யென்று நீக்கியே-தேருமிடத் 82

துற்றிடுமுக்காலத்து முள்ளமண்ணேமற்றெல்லாம்
வெற்றவெறும்பொய்யாய் விடுமிவைபோற்
-சொற்ற 83

பெயருருவமானவெல்லாம் பேணுதுநீக்கிற்
செயிரறுசித்தேதொன்றே திகழு-மியல்பாங் 84

கடலிற்றுரைநுரை காண்டிவலைமொக்கு
ளிடமுற்றெழினு மிதுபொய்-திடமுறுமெய் 85

யாவதெதுவென் றறியுமிடத்தப்பொருளின்
மேவுதிரைநுரை வெண்டிவலை-தாவியெழு 86

மொக்குளெனும்பெயரு மொழிபெயர்கொள்ளும்
மொக்கவெறும்பொய்யா முருசியுடன்-றக்க[முருவு 87

நெகிழ்ச்சிகுளிர்ச்சிமய நீரொன்றேமெய்யாம்
பகுக்குமவைபோலப் பாரிற்-றெரிகைக்கரிதாய்க் 88

காணுமுருநாமங் காணுதுபொய்யாகு
மாணுறுசற்சிற்சுகமே வாய்மையாம்-மாணு 89

இருப்பதுசத்துச்சத்தா லெண்ணுருவநாம
மிருப்பதுபோற்றேன்றும்வே றில்லை-யுரைப்பரி
[தாய்த் 90

தோன்றுதல்சித்துச்சித்தாற் றேன்றுமுருநாமந்
தான்றனித்துத்தோன்றுவது தானில்லை-யான்ற
[சுகந் 91

தானேயுளதிதனுற் றங்குமுருவநாம
மானசுகம்போ லணுகியிடு-நானேத 92

வேறேதுமில்லை விரிதிரயையாதிகடாங்
கூறுசலமொன்றே குறிக்குங்காற்- றேறிற் 93

பொருளொன்றேயாகும் புனிதமுறுநெஞ்சாற்
றெருளொன்றிக்காணென்றுசெப்ப-வருளொன்று 94

நெஞ்சுடையாயென்று நிகழ்த்திவழுத்திப்பணிந்து
தஞ்சமெனப்பொருந்திச் சார்வாரு-மெஞ்சலிலா 95

தெம்மருங்குஞ்சூழ்ந்துவர வின்னியங்களைவகை
[யின்
சும்மைக்கடலின் ஞெனிகாட்ட-மெய்ம்மதைரு 96
மோரார்பரிபுரண வின்போர்வ்டிவாகிப்
பேரோதவந்த பிரான்வந்தான்-சூரான் 97
மிடியாயிருள்போக்கு மேதகையான்வந்தான்
வடிவாலுவமையிலான் வந்தா-னடியார் 98
பவத்துயரைமூாற்றப் பரிந்துவந்தான் வந்தான்
றவத்தலைவர்சற்குரவன் வந்தா-னுவக்கு 99
முதுகிரியான்வந்தான் முகிலனையான் வந்தான்
வதிதலுறுபேரின்பன் வந்தா-னத்க 100
கவிராசர்போற்றுங் கனைகழலான்வந்தான்
றவிராததண்ணளியான் வந்தா-னவியாத 101
ஞானகிரணமுறு நற்சூரியன்வந்தா
னீனமொன்றுமில்லாவிறைவந்தான்-றேனனைய 102
நற்குமரதேவனெனு ஞானபரன்வந்தானென்
றெற்பெருகுசின்ன மெடுத்தியம்பச்-சொற்பிரமன்
முன்னோரனமாய் முடிகாணேனீண்டிரண்டே
மூன்னமாக்காண்குவலென் றுங்கெழல் போல் 104
-[பொன்னூர்

கவரிபுடையிரட்டக் கண்டோக்கிவனைத்
தவறில்லையில்லையென்று சாற்று-முவமையா 105
வாலவட்டம்வீச வடியார்களங்கநேராய்
சாலவொட்டாதோட்டுந் தகைமையா-யேலு 106
மெனதுகளங்கமுந்தீ ரென்றிந்துவந்து
தனதுபணிசெய்யுந் தகைபோ-லினமருவு 107
முத்துக்குடைநிழற்ற முத்திபெறவேண்டுமென்றே
ரித்திசைவாரீர்வாரீ ரென்றென்று- மொய்த்து 108
கரத்தாலழைப்பதுபோற் காணுர்கொடிக
ளுரைத்தாற்போலெவ்விடத்து மோங்க-வுரைப்பரிய
மெய்யர்கரமாமோக மென்மலர்களாம்பெரிய
துய்யமழையெங்குஞ் சொரியவே-செய்ய 109
மறைமுடிவுகாட்டு மணியேயெமது
குறைதவிரவந்தபெருங் கோவே-நிறையு 110
மதியேசெழும்பாகே வானமுதேகீரோ
ததியேயுலகுயிர்க்கோர் தாயே-கதியேயெந் 111
தாதையேசெந்தருவே தண்ணளியேநாயடியேன்
றீதையேபோக்குமிருந் தெய்வமே-யோதுட் 112
டிமிரதிவாகரனே செய்யமுதுகுன்றிற்
குமரதேவேயென்று கூறித்-தமிழ்தெரிந்த 113

வந்திக்ர்பல்லாண்டிசைப்ப மாமகரதோரணமுஞ்
செந்திருவுமோங்குந் திருமறுகி-லந்தணளி 114

மோனந்தயங்கி மொழிபொருளெல்லாந்தானு
மானந்தபோதகமீ தாங்கேறித்-தானந் 115

தவங்கள்சிறப்பத் தகுகுமரதேவ
னுவந்துபவனிவர வுற்றே-நவஞ்சேரு 116

மவ்வீதியுள்ளோ ரனைவோரும்வந்துவந்து
செவ்விபெறவே செறிந்தெங்குந்-தவ்வாத 117

விம்மேனிகொண்டதிவ னெம்மனோருள்ளிருந்த
பெய்ம்மையறவென்றே புகழ்வாரு-மெம்மானே 118

யோர்வடிவுகொண்டதிது வுண்மையாமெங்ஙனெனி
லேர்வடிவாற்காணலா மென்பாருந்-தேர்வரிய 119

பூரணமாநோக்குவிழிப் புண்டரிகனென்பாரு
மேரிணங்குபேரின்ப னென்பாரும்-சீரிணங்கு 120

கற்றோர்க்கினிய கரும்புகாணென்பாரு
முற்றுனெமக்கிவனென் றோர்வாரு-முற்று 121

விளைமையானென்பாரு மெம்போல்வார்க்குற்ற
வளைமையானென்பாரு மாகிப்-புளகமுடன் 122

கொள்ளப்பணிந்தவர்கள் கொண்டாடும்வேலைதனி
னள்ளத்தமியேனு நண்ணியே-விள்ளாது 123

மின்னிரண்டுமொய்த்ததொரு மேன்மைபோலே
மிளிருந்
தென்றிரண்டுபின்ருழ்ந்த செஞ்சடையு-நன்றி
தரு 124

மூன்றுபிறைநிரையா மொய்த்ததெனப்புண்டரஞ்சே
ரான்றதிருநெற்றி யழகினையுந்-தோன்றுந் 125

துளக்கமிலாமதிபோற் சோதிமுகமும்
வளக்கமலநோக்கிணையின் வாகுங்-கிளக்குமறை126

யஞ்சமுதித்தங்கழகு தருநாசியையும்
விஞ்சோர்மொழிமலர்வாய் மென்னகையுந்-தஞ்ச
முறு 127

மந்தரமோரிரண்டின் மாமுடிமேலோரிரண்டு
சுந்தரபானு துலங்குவபோற்-சந்தமுறுங் 128

காதிணையிற்பூண்ட கனகசெப்புக்குண்டலங்க
டீதறவேகாட்டுமிரு திண்புயமு-மோவிடம் 129

போக்கிமிளிறும் புனிதத்திறுமிடறு
நோக்கிணைக்கின்பென்ற நுவன்மார்பு-நீக்கரிதா130

மையந்திரிவகற்றி யச்சமறநிச்சயஞ்சொற்
செய்யமுறைகொண்ட திருக்கரமு-மையலுறு 131

சீவபரமிண்டுந் தேருமிடத்தேகமென்று
மேவியசின்முத்திரைகொண் மென்கரமுந்-தாவி
லாச் 132

செக்கர்வானம்பவளச் செம்மலையைச்சூழ்ந்ததுபோற்
றக்ககாவிந்துகில்சேர் தண்ணிடையுந்-தொக்க
வதின் 133

மேலொருமின்சூழ்ந்து விளங்குதல்போலத்திகழு
மோலுதரபந்தனத்தி னின்னழகுஞ்-சாலவே 134

பற்றிவிடாத பழவடியார்க்கின்பவெள்ளம்
வற்றுதளிக்கு மலர்ப்பதமு-நற்றவரு 135

மாணிக்கமால்வரைமேல் வண்டுசூபோர்த்ததுபோற்
காணத்திருநீற்றுக் காபணிந்தே-யாணிப்பொன் 136

மேனியையுமாம்மேனி மீதிலேயக்கமணி
யானியிலாலிங்கம மைத்தனதயு-நானேதக் 137

கண்ணிணைக்கோரின்னமுதாக் கண்டுபணிந்தேத்தி
யுண்ணினைவுதோன்று துறுபோதி-லெண்ண
வொணு 138

மெய்யரெலாநிற்ப வினையேனைத்தானேக்கி
யையனருண்மாலுளித்தானன்றுமுதற்-றுய்ய 139

வவன்றருமின்பம்பெறவே யாசைமிகக்கொண்டே
னுவந்தவன்பாற்றூதுவிட வுன்போ-னிவந்த 140

கடல்சூழுலகனைத்துங் காண்கிலேனெஞ்சே
யிடர்போக்குந்தூதாநீ யின்றுத்-திடமாகச் 14

செல்லவேவேண்டுஞ் சிறியேனுயிர்த்துணையே
நல்லவெனக்குதவு நாயகமே-புல்லறிவா 143
ஞயேன்பிறந்திறந்த நாளெல்லாமென்னுடனே
நீயேபிரியாது நின்றதனு-னீயேயென் 144
ருதையுந்தாயுந் தமரும்பெறுநட்புஞ்
சூதையேசெய்வார் துணைவரோ-நீதயவா 145
யென்பாலொருமித்திங் கேகாந்தமாயிருந்தா
லுன்போலுமென்போலு மொப்பாரா-ருன்
[பெருமை 146
யாகமமுமாரணமு மானபலகலையு
மியோகிகளுந்தாமே யுரைக்குங்காண்-மோகக் 147
கருத்தடங்கின்முத்தியது கையகலிற்கட்டென்
றுரைத்ததரனுமைக்கென் றுன்னி-விரித்து 148
புகழ்ந்ததலவே புகலரியநெஞ்சே
மிகுந்தபிறப்புவீ டென்னுந்-தகுந்தொகைக்குக் 149
காரணமுநீயே கருதுமுருகமெலா
மேரிணங்குநின்னையல்லாதில்லைகாண்-பாரி
ணங்கு 150
நீசற்றசைந்தா னிகழுமுலகாரு
நீசற்றுந்தோன்ருது நின்றக்கான்-மாசற்ற 151
மெய்ச்சிவமேயாகு மிளிருமிதாலுன்பெருமை
யச்சிவந்தானே யறியுங்காண்-மெச்சு 152

செக்கர்வானம்பவளச் செம்மலையைச்சூழ்ந்ததுபோற்
றக்ககாவிந்துகில்சேர் தண்ணிடையுந்-தொக்க
வதின் 133

மேலொருமின்சூழ்ந்து விளங்குதல்போலத்திகழு
மோலுதரபந்தனத்தி னின்னழகுஞ்-சாலவே 134

பற்றிவிடாத பழவடியார்க்கின்பவெள்ளம்
வற்ருதளிக்கு மலர்ப்பதமு-நற்றவரு 135

மாணிக்கமால்வரைமேல் வண்டூசுபோர்த்ததுபோற்
காணத்திருநீற்றுக் காபணிந்தே-யாணிப்பொன் 136

மேனியையுமாம்மேனி மீதிலேயக்கமணி
யாணியிலாலிங்கம மைத்தனையு-நாஞேதக் 137

கண்ணிணைக்கோரின்னமுதாக் கண்டுபணிந்தேத்தி
யுண்ணினைவுதோன்ரு துறுபோதி-லெண்ண
வொணு 138

மெய்யரெலா நிற்ப வினையேனைத்தாஞேக்கி
யையனருண்மாலளித்தானன்றுமுதற்-றுய்ய 139

வவன்றருமின்பம்பெறவே யாசைமிகக்கொண்டே
னுவந்தவன்பாற்றூதுவிட வுன்போ-னிவந்த 140

கடல்சூழுலகனைத்துங் காண்கிலேனெஞ்சே
யிடர்போக்குந்தூதா நீ யின்றுத்-திடமாகச் 14

செல்லவேவேண்டுஞ் சிறியேனுயிர்த்துணையே
நல்லவெனக்குதவு நாயகமே-புல்லறிவா 143

ஞயேன்பிறந்திறந்த நாளெல்லாமென் னுடனே
நீயேபிரியாது நின்றதனு-னீயேயென் 144

ருதையுந்தாயுந் தமரும்பெறுநட்புஞ்
சூதையேசெய்வார் துணைவரோ-நீதயவா 145

யென்பாலொருமித்திங் கேகாந்தமாயிருந்தா
லுன்போலுமென்போலு மொப்பாரா-ருன்
[பெருமை 146

யாகமமுமாரணமு மானபலகலையு
மியோகிகளுந்தாமே யுரைக்குங்காண்-மோகக் 147

கருத்தடங்கின்முத்தியது கையகலிற்கட்டென்
றுரைத்ததரனுமைக்கென் றுன்னி-விரித்து 148

புகழ்ந்ததலவே புகலரியநெஞ்சே
மிகுந்தபிறப்புவீ டென்னுந்-தகுந்தொகைக்குக் 149

காரணமுநீயே கருதுமுருகமெலா
மேரிணங்குநின்னையல்லாதில்லைகாண்-பாரி
ணங்கு 150

நீசற்றசைந்தா னிகழுமுலகாரு
நீசற்றுந்தோன்ருது நின்றக்கான்-மாசற்ற 151

மெய்ச்சிவமேயாகு மினிருமிதாலுன்பெருமை
யச்சிவந்தானே யறியுங்காண்-மெச்சு 152

முறவாலுயர்வா லுனைப்போலெனக்குப்
பிரிதாருளரதனுற் பேணி-யறவாழி 153

யான்குமாரதேவன்பா லபுடன்னே தூதுசெல்ல
நான்கருதியுன்பா னவிற்றினே-னியான்புகலு 154

மவ்விறைவனென்று மமருமிடஞ்சொல்லக்கேண்
மௌவன்மணகரு மலர்ச்சோலை-செவ்விதகு 155

முத்தாநதிசூழ் முதுகிரியாமாங்குநீ
வித்தாரமாய்ச்செல்லு வேலைதனிற்-கத்துஞ் 156

சமயரெனும்பொய்வேடர் தம்மைமிகநாடி
யமருமுறவாமென் றஞ்சேல்-கமைவி 157

லரிவையர்தாமென் றியம்பு மாமாயைநாடேல்
கருதுவிடாயமெனுங் கானின்-மருவு 158

நெறிதப்பிப்போயதனு ணின்றுமயங்கேல்
பொறிமத்தமாவொடுபோ ராடேல்-செறிவுற்ற 159

காமமெனும்பங்கத்திற் காலிடேல்கோபமெனுந்
தூமவழன்மிதித்துத் துள்ளியிடே-னுமவுரு 160

முன்பின்புடைபெயர்ந்து முன்னிநோக்காதேகி
யன்பெலாமோருருவே யானவரு-மின்பமய 161

மாகியிருப்போரு மரியதவச்செல்வர்களு
மேகமெனுந்துணிவை யெய்தினரு-மோகமறு 162

வீரசைவ நாயகரும் வேதமுனிவரரு
மோராகமசைவ வுத்தமரும்-பாரோரு 163
நாற்றிசையுஞ்சூழவவர் நாப்பணுடுச்சூழ
மேற்றிகழுமிந்து விளங்குதற்போற்-போற்றுங் 164
குமாரதேவென்னுங் கோமானிருப்ப
1 னமாவென்றவன்சபையை நாடி-யெமாலன்பு 165
தன்னடிக்கீழ்வைக்கத் தகுகருணைசெய்தானைப்
பொன்னடியென்சென்னி பொறித்தானை-மன்னு 166
பவளமலையுபய் பாரிசத்துஞ்செம்மைத்
திருவளரருவிதூங்குந் திறம்போ-னவமார் 167
கழுநீர்த்தொடையல் கலந்தபுயத்தானை
வழுநீத்தபாமாலை மன்னைத்-தொழுவார்க்கு 168
வேண்டியவேண்டியவெல்லாமிகவளிக்கு
மீண்டியதெய்வ மிகுந்தருவை-மாண்டறியா 169
வானந்தச்செல்வ மளிக்குஞ்சிந்தாமணியை
வானந்துதிக்கவரு மாதவத்தை-தீனனே 170
னேதுபிழைசெய்தாலு மேழையேனுக்கிரங்கித்
தீதனிவனென்னுத தெய்வத்தை-யோதும் 171

---

1. நமா என்பது நமஸ்காரம்.

பழமலையான்பாகம் பதியாவிளமை
யழகுடனேவாழுமை தம்மை-வழுவாது 172

தந்தசச்சிதானந்த சாகரத்தினூடாடுஞ்
செந்திருவாழுங்குமர தேசிகனைச்-சிந்தைநீ 173

பொன்னேமரகதமே பூரணமேயாரணமே
யன்னேமுதுகிரியா ராரமுதே-மன்னேயென் 174

றேத்திப்பணிந்தங் கெழுந்துகரஞ்சிரமேற்
சேர்த்துப்பின் கைகட்டிச் சென்றுநின்று-தீர்த்
தனே 175

யுன்பவனிகண்டங் குனதுகடைக்கண்ணோக்க
மன்புடனேபெற்ற வரிவைதா-னின்பம் 176

பெறுவதலாலவித்தைப் பேரிருளில்வாடி
யுறுவளோயாவு முதிக்கச்-செரியும் 177

பகுதியெனும்பௌவத்துப் பாடொலியினாலே
மிகுதிவருந்துவளோ மேனி-யகமென்று 178

மூலவகங்காரமெனு மூரிமதவேளினாற்
சாலமயங்கத்தகுவளோ -கோலியே 179

கத்துசமயக்குயிலின் காரொலியாலானந்த
நித்திரைபண்ணாது நிகழ்வளோ-சுத்தமுறுஞ் 180

சாத்தீகமாயையெனுஞ் சந்திரனல்வெம்புவளோ

காத்தான்வாய்மற்றிவளைக் காணென்றே-யாத்
தன் 181
திருவடியில்விண்ணப்பஞ் செய்துவணங்கி
யிருமைதருமிவ்வுலக மெல்லா-மொருமைபெறு 182
பேரின்பமாகியென்றும் பேராதிருந்தவிந்தச்
சீரின்பதாயேன் செறிந்தோங்கத்-தாரன்பா 183
யின்றிவளுக்கீத லெழில்வள்ளலாலென்றியம்பி
நன்றெனவேசம்மதிப்ப நன்குரைத்து-மன்றலுறு 184
சற்குமரதேவன் றருங்குவளைமாலைநெஞ்சே
யிற்பெறவேவாங்கிவா-வின்று. 185

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் நெஞ்சுவிடுதூது
முற்றிற்று.

துதி.

எவ்வுயிர்க்குந் தாயா யிருந்தின் பமுதளிக்குஞ்
செவ்விதரு சற்குமர தேவன்பா-லவ்வியந்தீர்
நெஞ்சமே செங்குவளை நீண்மாலை வாங்கிவரச்
செஞ்சவே தூதாகிச் செல்.

ஸ்ரீ குமாரதேவாயநம :

ஸ்ரீ இராமலிங்க அச்சகம், வடலூர்.